# காந்தி பாமாலை



# காந்தி
# பாமாலை



காந்தி நூல்கள்
ஐந்துள்
இதுவும் ஒன்று

# காந்தி பாமாலை

அரசு வெளியீடு: 23

விலை ரூ. **3-00**

**அரசு வெளியீடு,**
*231, ஆதிருப்பள்ளித் தெரு,*
கொழும்பு-13 *(இலங்கை).*

தொகுப்பாசிரியர்:

அண்ணல்

வெளியீட்டாளர்:

எம். ஏ. ரஹ்மான்

First Edition:
Gandhi Centenary (1969)

Price: **3-00**

# Gandhi Paamalai

Edited by:

Annal

Published
under the auspices of
Ilampirai
by
M. A. Rahman
ARASU PUBLICATIONS
231 Wolfendhal Street
Colombo-13 (Ceylon)

# பதிப்புரை

காந்தி நூற்றாண்டு நினைவாக ஐந்து நூல்களை வெளியிடுவதிற் பேருவகையடைகின்றேன். தமது பிரார்த்தனைகளிலே அல்லாஹ்வின் திருவசனத்தையும் உச்சரித்து, பாரத நாட்டிலுள்ள ஆறு கோடி முஸ்லிம்களுந் தலை நிமிர்ந்து வாழத் தன்னம்பிக்கை யூட்டும் பணியிலே தமது உயிரையே பலியிட்ட அந்த இனியவரின் நினைவாக ஐந்து நூல்களை ஏககாலத்தில் வெளியிடுவதால் உவகை இரட்டிப்பாகின்றது.

ஐந்து நூல்களுள் இதுவும் ஒன்று. ஈழத்து இலக்கிய அன்பர்களும், தமிழ் நூல் வெளியீட்டாளரும் இதனை ஒரு சாதனை என்றே கருதுவர். இப்பெருமையை எனக்குரியதாக எடுத்து கொள்ளாது, உலகிலே அன்பினாற் சாதனைகள் பல புரிந்த அந்த மஹாத்மாவுக்கே இச்சாதனையையும் பயனையும் அர்ப்பணமாக்குகின்றேன்.

காந்தி நூல்கள் ஐந்தினை வெளியிடல் வேண்டுமென்ற எண்ணம் என்னுள் மனைகோலிய பொழுது, அவை எத்தன்மைத் தானவையாக அமைதல் வேண்டுமென்ற எண்ணத் தடத்திற் சிந்தனை கிளைத்தல் தவிர்க்க முடியாததாகும். 'காந்திஜி பற்றிய பாமாலை ஒன்று ' என்பது இயல்பாகவே முதலிற் கட்டித்தது. இது காரணப் பசளையில் வேர் கொண்டது. சென்ற ஆண்டின் 'இளம்பிறை' அக்டோபர் இதழைக் காந்தி நூற்றாண்டுப் பூர்வாங்க இதழாக வெளியிட்ட பொழுது, அதிலே காந்திஜி பற்றிய கவிதைகள் சில

வற்றையுஞ் சேர்க்க நினைத்தேன். கவிஞர்களுக்கு எழுதிப் புதிய கவிதைகளைத் தருவிப்பதற்குப் போதிய கால அவகாசம் இல்லாதபடியால், ஏலவே பிரசுர மான தமிழகப் பழங் கவிஞர்களுடைய கவிதைகளை மறுபிரசுரஞ் செய்தல் இலகு வழியாக விடிந்தது. என் கைவசமுள்ள தமிழகக் கவிதைத் தொகுதிகளைப் புரட் டலானேன். தொகுதிக்குத் தொகுதி நான் தேடிய கவிதைகள் வழுகிக் கொண்டே போயின. 'காந்திஜி யின் வாழ்க்கைக் காவியக் காட்சிகள் கவிதைக்கான கருப் பொருளாக மாட்டாவா? தொகுதிகளில் ஏன் கவிஞர்கள் அவரைப் பற்றிப் பாடவில்லை?...' என்ற வினக்கள் மனத்திலே குதித்தன. அத்துடன் 'தர்மம் தன் வீட்டில் ஆரம்பமாக வேண்டும்' என்று அப்பொழுதும் நினைத்துக் கொண்டேன். பிறிதொரு வகையிலும் இத்தர்ம விசாரம் என்னை மொய்த்துக் கொண்டது.

ஐந்தாண்டுகளாக 'இளம்பிறை' இலக்கியத் திங்க ளிதழின் நிர்வாக ஆசிரியராக அமர்ந்து, தமிழ்ப்பணி செய்து வருவதுடன் இலக்கிய நலம்பேணும் சில வழிவகைகளை அவ்வப்போது அதிலே வெளியிட்டும் வந்துள்ளேன். இவ்வாண்டு,ஆகஸ்ட் இதழில் எழுதிய தலையங்கத்தின் சிலபகுதிகளை ஈண்டு குறிப்பிடுதல் பொருத்தம்.

> "தர்மம் தன் வீட்டில் ஆரம்பமாக வேண்டும்' என்பார் கள். இதிலே நமக்கு உடன்பாடு. இதனைச் சிந்தனையில் எடுத்துக் கொள்ளும்படி ஈழத்து இலக்கியச் சுவைஞர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.
>
> 'ஈழத்தின் படைப்பிலக்கிய முயற்சிகளைத் தமிழகத்தார் மதித்தல் வேண்டும்; ஈழத்திற் பிரசுரமாகும் நூல்களுஞ் சஞ் சிகைகளுந் தமிழகச் சந்தையிலே தாராளமாகக் கிடைக்கும் வழி செய்தல் வேண்டும்' என்பனவற்றைச் சத்திய வழிநின்று ஏலவே சில தலையங்கங்களிற் சுட்டிக் காட்டினோம். ஈழத்து

எழுத்தாற்றலில் நாம் கொண்டிருந்த நம்பிக்கை, இரு நாடுகளுக்கு மிடையில் ஆரோக்கியமான இலக்கியப் பரிவர்த்தனை செய்யப்படல் வேண்டும் என்பதில் நாம் கொண்டிருந்த கட்டித்த அக்கறை ஆகியன நமது நிலைக்களங்களாக அமைந்தன...இலக்கியம் உணர்ச்சியும் இணைந்த கலையாக இருப்பினும், இலக்கியத்தின் வளர்ச்சி கருதி எடுக்கப்படும் புற நடவடிக்கைகள் உணர்ச்சிக்குக் கட்டுப்பட்டதாக அமையாது அறிவு சார்ந்ததாக அமைதல் வேண்டும். ..'

உபதேசத்தையும் செயல்முறையையும் இனிதாக இணைத்தவர் மஹாத்மா காந்தி. அவருடைய நினைவஞ்சலி நூலான இதிலே இலக்கியஞ் சம்பந்தமான நமது உபதேசத்திற்குச் செயலுருக் கொடுக்கும் பணியினைத் திட்டமிடலானேன். இந்தியா - ஈழம் - மலேசியா - சிங்கப்பூர் ஆகிய நான்கு நாடுகளிலும் வாழும் தமிழ்க் கவிஞர்களிடம் கவிதைகளை வரவழைக்கும் பணியிலே துரிதமாக இறங்கினேன்.

**'...மரபு பேணி, நால்வகைப் பாவினத்திலும் ஏதாவதொன்று சார்ந்ததாக — இருபது வரிகளுக்கு மேற்படாததாகவும் தனிப்பாடலாகவும் – காந்திஜி பற்றித் தாங்கள் பா ஒன்று இயற்றி, அதிவிரைவில் அனுப்பியுதவுங்கள்....'**

இந்த வேண்டுகோளை நான்கு நாடுகளில் வாழும் சுமார் நானூறு கவிஞர்களுக்கு அனுப்பி வைத்தேன். அத்தனை கவிஞர்களுடைய முகவரிகளையும் கண்டு பிடிப்பதில் ஏற்பட்ட சிரமங்கள் எழுத்தில் வடித்திட இயலாத தனி அத்தியாயம். 'துணிந்தோம்; செய்து முடிப்போம்' என்பதுதான் தூண்டுகோலாக அமைந்தது. முடிவு தேதியை ஞாபக மூட்டி மீண்டும் அத்தனை கவிஞர்களுக்கும் எழுதினேன். கவிஞர்களைப் பற்றிய சிறுகுறிப்புக்கள் தருவிப்பதில் மீண்டுங் கடிதத் தொடர்பு கொள்ள நேர்ந்தது. இவ்வாறு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்களை எழுதியும் முழுமையாக நூறு கவிதைகள்தானும் தேற

வில்லை. மிகமிகக் காலதாமதமாகக் கிடைத்த ஒரே யொரு கவிதையைத் தவிர — அதுவும், பாமாலை நூல் தயாரிப்பு வேலைகள் நிறைவுற்ற பின்னர் கிடைத்தது என்ற காரணத்திற்காக நிராகரிக்கப்பட்டதைத் தவிர — மற்றைய எல்லாக் கவிதைகளையும் இங்கே பிரசுரித்துள்ளேன். 'கவிஞர்களில் இவர் அந்த முகாமா இந்த முகாமா' என்ற விசாரணையின்றி அனைவரிடமும் கவிதை கோரியதைப் போன்றே, வந்த அத்தனை கவிதைகளையும் பிரசுரித்துள்ளேன். கவிதைகளின் எண்ணிக்கையை நூறுகப் பூர்த்தி செய்ய வேண்டு மென்பதற்காக ஏலவே பிரசுரமான ஓரிரு கவிதை களையும் இங்கு பிரசுரிக்க நேர்ந்தது.

மலேசியா - சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் கவிஞர் களுடைய கவிதைகளைப் பெறுவதில் 'பொன்னி' ஆசிரியர் ந. தியாகராாசன் அவர்கள் தந்த உற்சாக மும் நல்கிய உதவியும் அளப்பரியது. எந்த நலனுக் கும் மேலாக இலக்கியத்தை அவர் நேசிக்கும் பண்பு தான் இக்கவிதைத் தொகுதி நான்கு நாடுகளின் படைப்பாக முழுமை பெறுவதற்கு உதவியதெனின் மிகையாகாது அந்த இலக்கிய அன்பருக்கு என் இனிய - நெஞ்சைவிட்டகலாத அன்புப் பெருக்கத்தின் பசுமையை இங்கு பொறிப்பதில் உவகையடைகின் றேன்.

யாழ்ப்பாணப் பகுதியில் இரசிகமணி கனக-செந்திநாதன், திருக்கோணமலைப் பகுதியில் அண்ணல், மட்டக்களப்புப் பகுதியில் ஜே. எம். எம். அப்துல் காதிர், பொத்துவில் பகுதியில் யுவன் ஆகிய நால் வரும் தத்தமது பகுதிக் கவிஞர்களிடமிருந்து கவிதை களைப் பெற்று அனுப்புவதில் மிக்க ஊக்கத்துடன் உதவினர்கள். அவர்களுடைய அன்பினை இனிமை யுடன் பாராட்டிக் கொள்ளுகின்றேன்.

வந்த கவிதைகளை இந்த நூலின் அமைப்பிலே கோவைப்படுத்தும் பாரிய பணியினை நண்பர் அண்ணல் இனிது இயற்றித் தந்தார். இளங்கவிஞர்கள் சிலருடைய பாடல்களிலே புகுந்த வழுக்களைக் களைந்தார். 'இருபது வரிகளுள் அமைதல் வேண்டும்' என்று நாம் கேட்டிருந்தும், இரு நூறு வரிகளுக்குக் குறையாத பாடலை அனுப்பியவர்களும் இருக்கின்றனர் கள். அவற்றிலே பொருத்தமானதை மட்டும் தேர்ந்தெடுத்தார். தரத்தின் வரிசையிலுள்ள சிரமங்களை உன்னி, வயதுக் கிரமமாகச் சீர்ப்படுத்தினர். கவிஞர்களைப் பற்றிய சிறு குறிப்புக்களைத் தயாரித்தார். தலைமையாசிரியராகப் பொறுப்பான பதவியை வகிக்கும் அவர், இதற்காகவே பல தடவைகள் கொழும்பு வந்து என்னுடன் தங்கி இந்த அலுவல்களைக் கண்ணுங் கருத்துமாகப் பூர்த்தி செய்து தந்தார். 'செஞ்சோற்றுக் கடன்' என்று உருகினன் கர்ணன். ஆனல், நான் அண்ணலிடம் பட்டுள்ள கடன்..?

குறுகிய காலத்தில்—உரிய காலத்தின் விளிம்பிலே கூட— ஆர்வந் தணியாது, இக்கவிதை மாலைக்கான கவிதைப் பூக்களை இயற்றி உதவிய இந்தியா-ஈழம் சிங்கப்பூர்-மலேசியா ஆகிய நான்கு நாடுகளிலும் வாழும் கவிஞர் பெருமக்கள் நல்கிய இனிய ஒத்துழைப்பிற்கு நன்றி கூறுதல் சம்பிரதாய பூர்வமானதன்று; உளஞ்சார்ந்தது.

தற்காலத் தமிழ்க் கவிதையின் தலைமகனுன மஹாகவி பாரதியாரின் கவிதையை முதற் பூவாக வைத்து, நான்கு நாடுகளைச் சேர்ந்த, வாழும் கவிஞர் நூற்றுவருடைய நூறு கவிதைகளைப் பூக்களாகத் தொடுத்து, கவியரசர் தாகூரின் பாடலை இறுதியில் வங்கத்துப் பூவாக வைத்து இம்மாலை அழகுற நிறைவு

றுகின்றது. காந்திஜியை மிகவுங் கவர்ந்த பஜனைப் பாடலே முத்தாய்ப்பு!

காந்தி பாமாலைக்குத் திருவும் பொலிவும் ஊட்டும் கவிதைப் பூக்களின் நயஞ் சுவைத்தலைச் சுவைஞனின் தளத்திற்கும் பக்குவத்திற்கும் விட்டுவிடுதலே சேமமானது. கவிதைக்குக் கவிதை சில விடயங்கள் மீண்டும் மீண்டும் வெவ்வேறு வடிவங்களில் வருதல் தவிர்க்க முடியாததாகும். அன்பு-அகிம்சை-இன்சொல் எளிமை-சத்தியம்-தர்மம் ஆகிய நெறிகள், சமத்துவம் சாதி ஒழிப்பு-சுதந்திரம்-சுதேசீயம்-மது ஒழிப்பு-மாதர் விமோசனம் ஆகிய காந்தீயக் கொள்கைகள் முதலியவற்றுள் தமக்கு ஈடுபாடுள்ள ஒன்றினையோ, சிலவற்றினையோ, கவிஞர்களுட் பெரும்பாலானோர் தொட்டுக் காட்டத் தவறவில்லை. இது கவிதா ஆற்றலுக்கு அப்பாலுள்ள காந்தீயப் பிணைப்பாற் சம்பவித்துள்ளது. கவிதை என்னும் நறும் பூக்களைத் தொடையலாகச் சீர்மைப்படுத்தும் நாராக இது பயன்பட்டுள்ளது எனக் கொள்ளுதல் பொருந்தும்.

இன்னும் ஒன்று. தமிழ் உலகளாவிய மொழி. இன்று அது ‘நீலத்தரைக் கடல் ஓரத்திலே நித்தம் தவஞ்செய் குமரி எல்லை, வடமாலவன் குன்றம் இவற்றிடையே புகழ் மண்டிக்கிடக்கும் தமிழ்’ எனத் தென்னகத்தார் நினைத்து தம்மையும் பிறரையும் ஒருவகையில் ஏமாற்றி, தமிழன்னையை வஞ்சிக்கத் தேவையில்லை. ஈழம்-மலேசியா ஆகிய நாடுகளில் வாழுந் தமிழ்த் தொழில் கொண்டோரின் ஆக்கங்களை, சென்னை-வாசகர் வட்டம் ‘அக்கரை இலக்கியம்’ என்ற மகுடத்தில் வெளியிட்டமை சரியான திசையிலே எடுக்கப்பட்ட நல்ல நடவடிக்கையாகும். இந்தப் போக்கு மேலும் விசாலிக்க இந்தக் ‘காந்தி பாமாலை’ வழி சமைக்கின்றது என்ப

திஞலேற்படும் நிறைவு ஒரு நிறைவின் பிறிதொரு நிறைவேயாகும். இந்த நிறைவு, பிராந்திய எல்லைகள்-அரசியற் கட்சிகள்-இலக்கிய வட்டங்கள்- பந்தபாச உணர்ச்சிகள் ஆகிய எல்லைக் கட்டுகளுக்கு அப்பாற் படத் தமிழ் இலக்கியம் வளப்படுத்தப்படல் வேண்டும்; சுவைக்கப்படல் வேண்டும் என்ற இலக்கியமேயான நற்பசளையில் வேர் கொண்டுள்ளது.

இனிப் பாமாலையின் சுவையை, தமிழ்த் தீஞ் சுவைக் கவிதைகளை மாந்திச் சுவைத்த உங்கள் சுவைப் பிற்கு விட்டுவிடுகின்றேன்.

**எம். ஏ. ரஹ்மான்**

மு. கருணாநிதி

முதலமைச்சர்

தமிழக அரசு

தலைமைச் செயலகம்

சென்னை-9

7-10-1969

வணக்கம்.

காந்தி நூற்றாண்டு நினைவாஞ்சலியாக காந்தி பாமாலை என்னும் கவிதைத் தொகை நூலொன்றினை வெளியிடும் தங்கள் பணியை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்.

ஈழம் - மலேசியா மற்றும் தமிழகக் கவிஞர்களின் கவிதைகளைக் கொண்ட இந்தக் கவிதைத் தொகுப்பு பயனுள்ளதாக அமையும் என்று நம்புகிறேன்.

எனது நல்வாழ்த்துக்கள்.

(ஒப்பம்) மு. கருணாநிதி

நிர்வாக ஆசிரியர்,
'இளம்பிறை',
கொழும்பு-13,
இலங்கை.

# முன்னீடு

உள்ளத்திலே உண்மையின் உள்ளொளியைக் காந்தி ஏற்றினர். கலங்கிய உலகிற்குத் தெளிவின் தூலத்தைச் சொல்லுஞ் செயலுமாக்கிய உத்தமர். மங்கிக் கிடந்த புனிதத்துவத்தைச் சுடராகப் பரிமளிக்கச் செய்தவர்; சத்தியர். மனித வாழ்க்கையின் பூரணத்துவத்தின் பூரணத்துவத்தை அணுகி மஹாத்மாவாகிய சித்தர்; மா மனிதர்.

மனிதத்துவத்தின் மகிமையை மதிக்கவும் நேசிக்கவுந் தெரிந்தோரும், அத்தகையோர் வாழும் நாடுகளும் அப்புனிதரின் நூற்றுண்டுப் பூர்த்தியை நினைவு கூரும் இவ்வேளையில், 'அரசு வெளியீடு' நிறுவனத்தின் அதிபர் ஜனுப் எம். ஏ. ரஹ்மான் ஐந்து நூல்களை மஹாத்மாவின் நினைவஞ்சலியாக வெளியிட விழைவு கொண்டு தொடுத்த பணி எவரையும் பிரமிப்பில் ஆழ்த்தும். நீண்ட காலத் திட்டத்துடன் செயலாக்க வேண்டிய இப்பணியினை அவர் மிகக் குறுகிய காலத்திற்குள்ளே சாதனைப்படுத்த விழைந்த துரிதத்தையும் துணிவையும் தமிழ் கூறும் நல்லுலகு பாராட்டவே செய்யும். துணிபவர் எண்ணித் துணிந்தனர்!

இவ்வகையில் அவர் கற்பித்த ஐந்து நூல்களுட் காந்தி பாமாலையும் ஒன்று. தமிழ் அமுது; அதன் உயிர்நிலை கவிதை. எனவே, பாமாலை சூட்டும் பணி காருண்ய வடிவர் காந்திக்கு மட்டுமல்ல, அவரடி தொட்டுச் செல்லும் அனைவர்க்குஞ் சுவைக்கும்; இனிக்கும். இத் தித்திப்புப் பணியின் இலட்சியத் தாக்கம்,

காலச் சுழலின் விரைவான ஓட்டத்திலேகூடக் கன மாகவே தோன்றும். கடல் கடந்து வாழும் கவிஞர் களையும் உள்ளடக்கும் ஆசை அந்தப் பணியினை இரட் டிப்பு ஆக்கியது. இந்த ஆசை நியாய பூர்வமாக, நெஞ்சத்து அவாவின் கனியாகக் கனிய கவிதைகளின் எண்ணிக்கை அதிகரிப்பு எதிர்பார்க்க இயலாத ஒன் றன்று. எதிர்பார்ப்பின் எச்சரிக்கையாகவே தனிப் பாடலின் வரிவடிவ வகை வரையறுக்கப்பட்டது.

கவிஞன் கட்டுப்பாட்டைக் கடந்து நிற்பவன். உணர்ச்சி அவனது உறுபொருள். கற்பனை அவன் வார்ப்பு. பழைமையில் நின்றும் புதுமையைத் தரிசித் தல் அவன் இயல்பு. இக் காரிய அறுவடைக்குக் காரணப் பொருளாய் உதவுவது பயிலுறு சொல். இச் சொல், கவிஞனது கையில் சக்திமிக்கதோர் ஆயுத மாக மிளிர்கையில் 'பொருள் புதிது; சுவை புதிது' எனப் புதுப் பண் ஒலிக்கின்றது. இத்தகைய வீறு மிக்கக் கவிஞர்களின் அகத்தில் ஊறி வந்த கவிதை எல்லாவற்றையும் 'அப்படியே' பிசுரித்தல் அசாத்தியத் தினை உருவாக்கியது. கணித்த கால எல்லை, நூலின் பக்கங்கள் ஏதுக்கள். வானமளைந்து அனைத்தும் அளை யும் 'நெடுங்'கவிதைகளால் அணி செய்து மகிழ அவாவுறும் கவிஞர்களின் விருப்பினைப் பூர்த்தி செய்ய இயலாது போயிற்று. அவற்றிலேகூட ஒளிபாய்ச்சும் ஓரிரு கவிதைகளைத் தேர்ந்து தொடுக்கும் பணி சிரமசாத்தியமே. ஆயினும், ஏற்றோம். சிலவற்றை முழுமையாகப் பிரசுரிக்கவில்லை என்பதற்கு எச்சில் களின் மறுதலிப்பு எனப் பொருள் கொள்ளத் தேவை யில்லை. பாமாலையை நுகரும் கவிஞர்கள் நமது சிர மத்தை உணர்ந்து, இத்தேர்வு முறைமையின் சீர்மைக் குக் களங்கம் கற்பிக்கமாட்டார்கள் என்பது என் நம்பிக்கை.

இப்பாமாலையிலே பல்வகைக் கவிதா ஆற்றல்களும், நோக்குகளுஞ் சங்கமிக்கின்றன. மூத்து முதிர்ந்த உள்ளங்களின் கனித்தேறலாக ஊற்றெடுத்துப் பாயும் கவிதா ஆற்றல்களும் உள; அடி தூக்கி நடைபோடக் கால் பாவும் பாங்கினதாய ஆற்றல்களும் உள. முதுமையிலே அடி சறுக்கும் போக்குகளும் உள; இளமைத் துடிப்பின் கவர்ச்சிப் போக்குகளும் உள. ஒன்றின் ஒன்று ஒரு நோக்கிற் சுவைப்புத்தான். நூறு கவிதைகளையும் சுவைப்பினை உயிர்ப்பொருளாக வைத்து வரிசைப் படுத்தியிருத்தல் சாலாது. அகரவரிசையும் அந்நியம். எனவே, வயதினையும் அநுபவத்தினையும் மதிக்கும் மரபினைத் துணைப்பற்றி இவற்றினை வரிசைப்படுத்தியுள்ளோம்

கவிஞர்களைப் பற்றிய சிறி குறிப்புக்களை அவரவர் பாடலின் அடியிற் சேர்த்துள்ளோம். ஒவ்வொரு பாடலையும் இயற்றிய ஒவ்வொரு கவிஞரைப் பற்றியும் சுவைஞருக்கு சில ஆதாரச் செய்திகளையாவது அறிந்து கொள்வதற்கு இக்குறிப்புக்கள் நிச்சயமாக உதவும்.

பண்டிதர்களின் முதுசொம் எனக் சிலருடைய 'பொட்டக'ங்களிலே மட்டுந் 'தூங்கி'க் கிடந்த கவிதை இனம் எண்டிசையும் விரிந்து, பாமர நெஞ்சங்களிலும் மண்டிக்கிடந்த தமிழ்த் துள்ளலோடு வீறுகொண்டு விளையாடுஞ் செஞ்சொற் கவிதைகளைச் சாறு பிழிந்து உண்டு கனிந்து களித்துத் திளைத்திடச் செய்த மஹாகவி பாரதியாரின் ''வாழ்க நீ எம்மான்'' என்ற மஹாத்மா காந்தியின் மகத்துவத்தை எகத்தாளமாக எடுத்தியம்பும் கவிதா நயத்தில் ஆரம்பித்து, காந்தி பாமாலை என்னும் செந்தமிழ்த் தொடையலில் இடம் பெறும் வண்ணத்திலும்-வகையிலும்-வனப்பிலும்-வாசனையிலும் பலவாய நூறு

மலர்களை வரிசைப்படுத்தி, 'எம். கே. காந்தி' என அழைக்கப்பட்ட மனிதருள் மாணிக்கத்தை 'மஹாத்மா' என அழைக்கும் மந்திரச்சொல்லைத் தந்த குருதேவர்-கவியரசர் ரவீந்திரநாத் தாகூரின் கவிதையுடன் இந் நூலை நிறைவாக்கியுள்ளோம்.

ஆக்க இலக்கியத் துறையில் புத்தம் புதிய நூல்கள் பிரசுரிப்பதைக் கலையாகக் கொண்டு, விந்தைச் சாதனைகள் பல இயற்றிக் காட்டியும், ஈழத்துத் தமிழ் இலக்கியத்திற்கு நன்னீர் பாய்ச்சியுந் தமிழ் செய்யும் செம்மனப் பண்பாளர் நண்பர் எம். ஏ. ரஹ்மானின் வண்ண எண்ணத்தையும் திண்மைச் செயலையும் எவ்வளவு பாராட்டினுலுந் தகும்.

தன்னையே சுத்திகரித்துத் தனித்துவமான சிந்தனையின் செயலும் விளைவுமாய் விளங்கி, அனைத்துலகப் பாராட்டுக்கும் உரித்தான உத்தமர் மகாத்மா காந்திஜி நூற்றுண்டு அஞ்சலியாக அவனியிலே தொகுக்கப்பட்ட ஒரேயொரு கவிதைத் தொகுதியாம் இதனைத் தொகுக்கும் பணியில் நான் ஈடுபட்டமை மன நிறைவினைத் தருகின்றது. கவிதைகளின் சுவை வாசகர்களுக்குப் பிறிதொரு வகையான நிறைவினைத் தருமென்பது என் நம்பிக்கை.

**அண்ணல்**

**பெரிய கிண்ணியா**
**கிண்ணியா**
**2-10-69**

## பாமாலை பாடினோர்

### இந்தியா


| | பக்கம் |
|---|---|
| அமலன், எஸ்.பி | 79 |
| இராமலிங்கம்பிள்ளை, வெ | 18 |
| இளங்கோவன், அ | 44 |
| உமைதாணுபிள்ளை, சு | 24 |
| கமலா, எம்.எஸ் | 46 |
| கம்பதாசன் | 36 |
| கவி கா.மு. ஷெரீப் | 32 |
| கிருபானந்தவாரி, ம | 25 |
| கொத்தமங்கலம் சுப்பு | 28 |
| சாலை இளந்திரையன் | 69 |
| சிதம்பரம், என்.எஸ் | 55 |
| தமிழ்க்கடல் | 21 |
| தூரன், பெ | 26 |
| நல்லதம்பி, வெ | 85 |
| பார்த்தசாரதி, நா | 75 |
| பாலசுப்ரமணியம், கு.மா | 42 |
| பூங்குன்றனார் | 52 |
| மதகுபட்டி கிட்டு | 86 |
| மனசை ப. கீரன் | 94 |
| முகவை இராஜமாணிக்கம் | 35 |

## ஈழம்


| | |
|---|---|
| அண்ணல் | 70 |
| அப்துல் காதர் லெப்பை | 30 |
| அம்பி | 64 |
| அவைவேந்து | 71 |
| அன்பு முகையதீன் | 103 |
| ஆரையூர் அமரன் | 56 |
| இக்பால், ஏ | 93 |
| இராமுப்பிள்ளை, ஆ | 34 |
| இளம்பரணன் | 68 |
| ஏயாரெம் ஸலீம் | 61 |
| ஐயாத்துரை, வே | 48 |
| கணேஷ், கே | 41 |
| கந்தவனம், வி | 78 |
| கமலபூஷணி திருநாவுக்கரசு | 40 |
| கவிவாணன் | 117 |
| கனகசூரியம், சி | 96 |
| காரை செ. சுந்தரம்பிள்ளை | 95 |
| குமாரசாமி, வி.த | 88 |
| குமாரசாமி, வே | 109 |
| கோவைவாணன் | 29 |
| சக்தீ | 53 |
| சபாபதி, ஆ | 22 |
| சாரணாகையூம் | 100 |
| சாரதா | 39 |
| சிவபாத சுந்தரம், நா | 43 |
| சிவப்பிரகாசம், செ | 37 |
| சிவானந்தன், இ | 104 |
| சின்னையா, சி | 19 |
| சுப்பிரமணியம், ச | 50 |

| | |
|---|---|
| சுப்பிரமணியம், ஸி | 20 |
| சூரியன், மு. க | 47 |
| சொக்கன் | 67 |
| சோதி | 38 |
| தர்மு சிவராம் | 98 |
| தாமரைத்தீவான் | 76 |
| தாவூத், யூ.எல் | 89 |
| திமிலைக் கண்ணன் | 102 |
| திமிலைத் துமிலன் | 91 |
| தில்லைச் சிவன் | 63 |
| நயீமா. ஏ. பசீர் | 116 |
| நல்லைக்குமரன் | 74 |
| பக்கீர்த்தம்பி | 49 |
| பதுறுதீன், து | 57 |
| பரீது, ஏ.ஆர்.எம் | 114 |
| பாண்டியூரன் | 83 |
| பூபாலப்பிள்ளை, ஐ | 60 |
| பெரியதம்பிப்பிள்ளை, ஏ | 23 |
| பொன்னம்பலம், மு | 101 |
| மண்டூர்க் கவிஞர் | 62 |
| மருதமைந்தன் | 84 |
| மருதூர்க் கொத்தன் | 81 |
| மஹாகவி | 58 |
| மீரா | 65 |
| முகம்மது காசீம், எம்.பி.எம் | 31 |
| முதல்வனூர் | 110 |
| முருகையன், இ | 80 |
| மூதூர் பரீது | 112 |
| மொயீன் ஸமீன் | 108 |
| யுவன் | 82 |
| வன்னியூர்க்கவிராயர் | 51 |
| வேலுப்பிள்ளை, ஸி.வி. | 33 |

ஜெயம் 73
ஜெளபர் மௌலானு 113
ஸுபைர், எம்.ஸி.எம். 77
ஷரிபுத்தீன், ஏ. எம் 27
ஹரீஸ், எம்.எஸ்.எம் 45
ஹஸன் மௌலானு 87

## சிங்கப்பூர்

பழனிச்சாமி, சித 66
முல்லேவாணன் 107

## மலேசியா

அன்பு 72
இளவழகு, ஐ 106
உலகநாதன், ஐ 92
காரைக்கிழார் 105
கோவலன் 97
சீனி நைனு முகம்மது 115
சோமசன்மா 54
பசுங்குடையார் 99
மு. பா. 111
முரசு - நெடுமாறன் 90
வேலுசுவாமி, சி 59

# காந்தி பாமாலை

## முதற் பூ

வாழ்கநீ எம்மான், இந்த வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தா மோர் பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி மஹாத்மா! நீ வாழ்க வாழ்க!
அடிமைவாழ் வகன்றிந் நாட்டார் விடுதலை யார்ந்து
செல்வம்!
குடிமையி லுயர்வு, கல்வி ஞானமும் கூடி யோங்கிப்
படிமிசைத் தலைமை யெய்தும் படிக்கொரு சூழ்ச்சி
செய்தாய்!
முடிவிலாக் கீர்த்தி பெற்றாய்! புவிக்குள்ளே
முதன்மை யுற்றாய்!

மஹாகவி பாரதியார்

## பூ: இரண்டு

சொல்லுவது எல்லார்க்கும் சுலபமாகும்
சொன்னபடி நடப்பவர்கள் மிகவும்சொற்பம்
எல்லையின்றி நீதிகளை எழுதுவார்கள்
எழுதியது பிறருக்கே தமக்கென்றெண்ணுர்
தொல்லுலகில் நாமறிந்த தலைவர் தம்முள்
சொன்னதுபோல் செயல் முயன்றுர்
இவரைப்போல
இல்லையெனும் மோகனதாஸ் கரம்சந்த்காந்தி
இந்தியத்தாய் உலகினுக்கே ஈந்த செல்வம்.

**வெ. இராமலிங்கம் பிள்ளை**

*இராமலிங்கம் பிள்ளை. வெ. நாமக்கல்*

**பிறப்பு:** *மோகனூர், சேலம், தமிழ்நாடு, 19-10-1888.*

*காவியக் கவிஞரும், ஓவியக் கலைஞருமான இவர் சுதந்திர பாரதத்தின் ஆஸ்தான கவிஞராகிய முதல் தமிழ் மகனுவர். காவியம், நாவல், நாடகம் என்ற வகையில் வெளிவந்த 32 நூல்களுக்குமேல் எழுதியுள்ளார்.*

## பூ: மூன்று

எட்டுக் கோடியென் றெண்ணுடை வெள்ளைய
　　ரிந்தி யப்பெரு மக்க ளினத்தில் ஐ
யெட்டுக்கோடியை யாளனி யாயத்தை
　　யெண்ணிச் சாத்து விகச்சம ரின்றிறங்
கட்டுப் பாட்டொடு செய்ததில் வெற்றியுங்
　　கண்ட காந்தி மகானெங் கருத்தினில்
விட்டுப் போகிலர் காணொரு காலமும்
　　வேறு கூறன் மிகையது வாமரோ.

வெள்ளை யாவெளி யே றென மேடையில்
　　வீர வாசகம் மெய்யுறக் கூறியே
கள்ள மின்றிநல் லிந்திய மக்களைக்
　　காத லோடு திரட்டிக் கடுஞ்சிறை
தள்ளி னும் விடாது சமர்த்தொழில்
　　தன்னை வெற்றி தருமுறை யாற்றியே
வில்ள ருஞ்சுய ராச்சியம் பெற்றசீர்
　　வீரன் காந்திக்கு மெய்த்துதி கூறுவாம்.

**சி. சின்னையா**

சின்னையா. சி. புலவர்

**பிறப்பு:** க்ச்சாயூர், இலங்கை, 1895.

மரபு வழிவந்த புலவர். இவர் இயற்றி வெளியிட்ட 'கதிரைமலைக் கோவை' என்னும் நூல் ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலத்தின் ஆயிரம் ரூபாய் பரிசு பெற்றது.

## பூ: நான்கு

பூமலியும் புகழ்சீர் வாய்மை நிறைந்ததும்பும்
பொய்கையாரும்
மாமலியும் புண்ணியராய் காபாவின் கனிதவத்தில்
மகவெனவே தோன்றி
தூமலியும் மோகனதாஸ் கரீம்சாந்த் காந்தி
தூயதிரு வுருவாகி கலேகள் திகழ்
சீர் மலியும் கற்பகம்! செகமதில் சிறந்தோர்
சிந்தையன்! திருவினுன்!

**ஸி. சுப்பிரமணியம்**

சுப்பிரமணியம். ஸி

**பிறப்பு:** வட்டக்கொடை, இலங்கை, 1895.

கண்டி டிரினிடி கல்லூரியிலே படித்த இவர் கவிப்புலமை மிக்க குடும்பத்திற் பிறந்தவர். 'மகாத்மாமீது பாடல்கள்' என்ற சிறு நூலொன்றை அச்சிட்டு வெளியிட்டுள்ளார்.

# பூ: ஐந்து

அன்புதவழ் முகம்எங்கே?
அருள்சுரக்கும் விழிஎங்கே? அமுதம் ஊறி
இன்பொழுகும் திருவாயில் இனிகின்ற
பேச்செல்லாம் எங்கே? எங்கே?
பொன்புரையும் திருமேனிப் பொலிவு எங்கே?
மோகனப்புன் சிரிப்பும் எங்கே?
என்புருக்கும் திறம்எங்கே?
எழில்உகுக்கும் பெரும்காந்தி எங்கே? அந்தோ!

ஆயிரம்ஆண் டுக்குஒருகால்
அவதாரம் செய்திடுவர் பெரியார் என்ப;
'நீஅவருள் ஒருவன்எனல் நிறைமதிநேர்
மின்மினி' என்று உரைப்பது ஒக்கும்;
மாஇருஞா லத்தினிலே நின்போல
வாழ்ந்திட்டான் ஒருவன் உண்டோ?
தாயனையாய்! தண்ணளியே! சத்தியமே!
தவப்பழமே! தன்நேர் இல்லாய்!

**தமிழ்க் கடல்**

*சொக்கலிங்கன். ராய. தமிழ்க்கடல்*

**பிறப்பு:** *காரைக்குடி, தமிழ்நாடு, 30-10-1898.*

*அழகப்பா கல்லூரி தமிழ் ஆராய்ச்சித் துறை இயக்கு நராகத் தமிழ்ப்பணி புரிந்த இவர் 22 நூல்களைத் தொகுத் தும், பதினைந்து நூல்களை இயற்றியுமுள்ளார். 'தமிழ்க் கடல்', 'சிவமணி', 'சிவம்பெருக்கும் சீலர்' ஆகிய சிறப் புப் பெயர்கள் பெற்றவர்.*

## பூ: ஆறு

நல்லோர் துயர்களையு மல்லோர் நவைகளையும்
நில்லா தழிப்பதற்கு நீணிலத்தே — பல் விதமாய்
வந்திடுவே னென்று வகுத்தமறைக் கண்ணனென
வந்தார் மகாத்மா மகிழ்ந்து.

வாழும் வகையறிந்து வாழ்ந்து வழிகாட்டி
ஊழி புகழ் படைத்த உத்தமருள் — ஆழியென
வந்ததிரு வள்ளுவர் போல் வந்தார் மகாத்மாவும்
சிந்தனையுள் நிற்கச் சிறந்து.

தீயவர்க்குத் தீமையினைச் செய்யா தறவழியில்
தூயவனாய் நின்று சுகம் பெறெனக் — காயமது
வீழும் பொழுதினிலும் வேண்டிநின்ற யேசுவைப்
போல்
பாழுலகில் மாய்ந்தார் பரிந்து.

**ஆ. சபாபதி**

*சபாபதி. ஆ. பண்டிதர்*

**பிறப்பு:** *மட்டக்களப்பு, இலங்கை, 1898.*

*பழம்பெரும் தமிழ்ப் புலவராகிய இவர் தமிழ்த்தொண்டை மூச்சாகக் கொண்டவர். 'விடுதலை வேட்கை' போன்ற நூல்களை இயற்றி வெளியிட்டுள்ளார்.*

## பூ: ஏழு

சத்தியத்தின் வாழ்வு தருமத்தின் வைப்புலகில்
உத்தமர்க ளுள்ளே ஒருதிலகம் — பக்திவளர்
சாந்திநிலை சாத்துவிக சக்திக் குதாரணமாய்க்
காந்திமகான் தன்னையே காண்.

**ஏ. பெரியதம்பிப்பிள்ளை**

*பெரியதம்பிப்பிள்ளை, ஏகாம்பரம்பிள்ளை, புலவர்மணி*

**பிறப்பு:** *மண்டூர், இலங்கை, 1899.*

*இன்று ஈழத்தின் தலைமைக் கவியாக வாழுகின்றார். அவருடைய கவிதா ஆற்றலைக் கண்ட தமிழ் மக்கள் 'புலவர் மணி' என விருது சூட்டி மகிழ்ந்தனர். அவர் இயற்றி வெளிவந்துள்ள 'பகவத் கீதை வெண்பா' என்னும் நூல் ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலத்தின் ஆயிரம் ரூபாய் பரிசு பெற்றது.*

## பூ: எட்டு

சண்டிசெய் தீண்டாப் பேய் செத்தொழிய
சீர்குலைக்க
மண் டும் மதுவரக்கர் மாண்டழிய — கண்டெடுக்கும்
காந்திநூற் றுண் டு விழாக் காரியமாய்
ஆய்ந்திடுவோம்
ஏந்தும் பணியாக இன்று.

தேசப் பிதாவை தியாகமிகு சீலவனை
ஆசையை அன்பாகக் கொண்டவனை — நேசனை
சத்யா கிரகத் தள பதியை நெஞ்சமே
நித்தமும் நீங் கா மல் நினை.

**சு. உமைதாணு பிள்ளை**

உமைதாணு பிள்ளை. சு., வித்துவான்

**பிறப்பு:** தேரூர், கன்னியாகுமரி, தமிழ்நாடு, 20-2-1908.
கவிமணி தேசிகநாயகம் பிள்ளையின் பேரரான இவர், அவருடைய கவிதா வாரிசாகவும் விளங்குகின்றார். இவரது மூன்று பாடல்களை பாரத சாகித்ய அகாடமி இந்தியில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளது. 'கன்னியாகுமரி மான்மியம்' என்ற நூலின் ஆசிரியர்.

## பூ: ஒன்பது

அண்ணலார் காந்தி யடி களார் காட்டிய சீர்
புண்ணிய நெறியதனிப் போந்தவர் — எண்ணியவை
எய்தி நலம் பெறுவர் என்றும் இடர்களைந்தே
உய்தி பெறுவர் உயர்ந்து.

**ம. கிருபானந்தவாரி**

கிருபானந்தவாரி. ம. வித்துவான்

**பிறப்பு:** *காங்கேய நல்லூர், வட ஆற்காடு, தமிழ்நாடு, 25-8-1908.*

*'அபிராமி', 'பவளேந்திரி' முதலிய சிறுகதைத் தொகுதிகளையும், இரண்டு பிரயாண நூல்களையும், திருப்புகழ் விரிவுரை ஐந்து தொகுதிகளையும் இயற்றியுள்ளார். புகழ் பெற்ற சமயச் சொற்பொழிவாளர்.*

## பூ: பத்து

காந்தி வழியே உலகைக் காக்கும்
கண்ட தில்லையா? — இன்னும்
கண்க ளற்ற குருடர் போல
வாழ்தல் நல்லதா?
மாந்தர் எல்லாம் இன்ப மெய்தி
வாழவகை செய்வீர் — காந்தி
மகான் காட்டிய அஹிம்சை வழியை
மனத்தில் கொள்ளுவீர்

அணுக்குண் டாக்கப் போட்டி வேண்டாம்
அன்பு செய்யவே — உலகில்
அனைத்து நாட்டு அறிஞர் எல்லாம்
ஆர்வம் காட்டுவீர்
துணிச்ச லோடு முயன்று நின்றால்
நாங்கள் வாழுவோம் — இதனைச்
சொல்லவே நாங்கள் வந்ததும் உமக்குச்
சிறுமை அல்லவா?

**பெ. தூரன்**

*பெரியசாமித் தூரன். ம. ப.* **B. A., L. T.**
**பிறப்பு:** *மஞ்சக்காட்டுவலசு, கோயம்புத்தூர், தமிழ்நாடு*
*26-9-1908.*

*கவிதை, சிறுகதை, கட்டுரை, நாடகம் ஆகிய துறைகளில் ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ளார். கலைக்களஞ்சியத்தின் பிரம ஆசிரியராக அமர்ந்து பத்துத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். பத்மபூஷன். குழந்தைகள் கலைக்களஞ்சியத்தின் பிரதான ஆசிரியராகப் பணியாற்றுகின்றார்.*

## பூ: பதினொன்று

மதத்தா லினத்தால் மொழியாலே மாந்தர்
பலவாய்ப் பிரிந்தாலும்
விதத்தா லொன்றே நாடொன்றே பெற்ற
தாயின் விடுதலையை
யிதத்தோ டுன்னி யெல்லாரு மெழுவீ
ரகிம்சைப் போர்க்கென்னும்
பதத்தா லுளத்தை வெல்காந்தி நாமம்
வாழ்க வாழியவே.

உபவாசப் பெருமை கண்டாங் குள்ளமு
முடலுந் தூய்தாய்த்
தபவாசங் கொண்ட தாலே தருக் கொழிந்
தான்ம வீறுற்
றபவாதம் புரிந்தாள் வோர்க ளலக்கணுற்
றகன்று நித்தம்
உபசாரம் புரியச் செய்த உயர் காந்தி
நாமம் வாழ்க.

**ஏ. எம். ஷரிபுத்தீன்**

*ஷரிபுத்தீன், ஆதம்பாவா மரைக்காயர்*

**பிறப்பு:** *மருதமுனை, இலங்கை, 1909.*

*'ஞானரை வென்ருன்' என்ற நூலின் பதிப்பாசிரியர். 'நபிமொழி நாற்பது' என்னும் கவிதை நூலுக்காக ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலப் பரிசு பெற்றவர். வித்தியாதரிசியாகவும் கல்விப் பணி புரிந்து ஓய்வு பெற்றுள்ளார்.*

## பூ: பன்னிரெண்டு

பாரதநாட்டிற்கு தந்தையவன்
பாவத்தை வென்றிடும் சிந்தையவன்
மாரதவீரரை வாசகத்தால்
மானிலத்தில் தோன்றச் செய்ததவன்

சூரர்கள்கோடி படைத்துவிட்டான்
சுத்தசுயாட்சியை வாங்கித் தந்தான்
ஆரமுதாகிய சத்தியமும் அன்பும்
அகிம்சா தத்துவமும்

கொள்கை நமக்குக் கொடுத்து உள்ளான்
கொண்டு செலுத்தி நடத்தி வந்தால்
கோடானு கோடி தலைமுறைக்கே
வாடாமல் இந்தியர் வாழ்ந்திடலாம்.

**கொத்தமங்கலம் சுப்பு**

சுப்பு, கொத்தமங்கலம்

**பிறப்பு:** கன்னரியேந்தல், இராமநாதபுரம், தமிழ்நாடு, 9-11-1910.

'மஞ்சிவிரட்டு' (சிறுகதைகள்) காந்தி மகான் கதை (கவிதை), நாடக உலகம் (நாடகம்), தில்லானா மோகனம்பாள் (நாவல்) ஆகிய நூல்கள் பலவற்றை எழுதியுள்ளார். பல திரைப்படங்களுக்குக் கதை-வசனம்-பாடல்கள் எழுதியுள்ளதுடன், நல்ல குணசித்திர நடிகருமாவர்.

## பூ: பதின்மூன்று

ஏந்தலாங் காந்தியின் ஏமமில் வாழ்க்கையில்
ஏது மோர் கூற்றினை என்றெனு மறப்பின்,
இந்தஇப் பிறவியைச் சிந்தையிற் கொள்ளக்
கணமும் வேண்டாக் கடப்பாட் டென்னையும்
அந்தமில் லருளுடை அகிம்சா மூர்த்தியைச்
சிந்தனை செய்தொரு செய்யுளின் றெழுதுநீ
என்றதன் கருத்தோ என்பாற் கண்ட
பாவினைத் தொடுக்கும் பாங்கெனக் கூறின்
அஃதோ வன்று;
சங்கம் பிரியாச் செவ்வா யிராமன்
பங்கமில் பெயரைப் பராவி யுடனீத்த
எங்கள் பிரானை எல்லார்க்கு மகானை
என்றோ கனவின் மறந்தே னென்று;
ஆதலினீ வாழிய பெரிதே!

**கோவைவாணன்**

மயில்வாகனம் ஆ. வி., **B. A.**

**பிறப்பு:** கோப்பாய், இலங்கை, 29-10-1912.

ஆழ்ந்த இலக்கியப் பற்றுள்ள இவர் அவ்வப்போது கவிதைகள் இயற்றி வருவதுடன், 'புலவராற்றுப் படை' யைப் பதிப்பித்தும் வெளியிட்டுள்ளார். கல்வி வெளியீட் டுத் திணைக்கள உதவி ஆணையாளராக உயர் பதவி வகிக்கின்றார்.

## பூ: பதினைன்கு

சுதந்திரத்தைப் பெறுவதிலோர் கஷ்டமில்லை
தூங்குகின்ற இம்மக்கள் நெஞ்சிலந்தச்
சுதந்திரத்தின் தேவையினை எவ்விதம்நான்
சுடர்விடவே செய்திடுவே னென்று நைந்து
மதந் தருமோர் உண்மையினைக் கரத்திற் கொண்டு
மகாத்மாவாய் மாறியவர் பகவத்கீதை
இதந்தரவே போதித்தார் மக்களெல்லாம்
இவர்காந்தி ராமாவ தாரமென்றார்.

தீவிர போக் குடையசில ஹிந்துக்கள்தான்
தீராத பிரிவினைக்கு வித்திட்டார்கள்
ஆவியுட லகலுமட்டும் ஹிந்துமுஸ்லிம்
ஐக்யத்துக் காயவரே பாடுபட்டார்
மேவியவர் புகழ்பாடும் பக்தகோடி
மேதினியில் அவர்கொள்கை வழியில்நின்றால்
தாவிவரும் பகையேது சண்டையேது
தாரணியே சாந்தியெனக் கொள்ளலாமே.

**அப்துல் காதர் லெப்பை**

*அப்துல் காதர் லெப்பை*

**பிறப்பு:** *காத்தான்குடி, இலங்கை, 7-9-1913.*

*'இக்பால் இதயம்', 'ரூபய்யாத்', 'செய்னம்பு நாச்சியார் மான்மியம்' முதலிய கவிதை நூல்களின் ஆசிரியர். 'ரூபாய் யாத்'திற்கு ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலத்தின் ஆயிரம் ரூபாய் பரிசு பெற்றவர்.*

# பூ: பதினைந்து

வெள்ளையர் என்னும்நாக விதேசிகள்
நாட்டையாண்டு
கொள்ளை கொண்டடிமையாக குடிகளைப்
பகடையாக்கி
தொல்லைகள் கொடுத்தவேளை
துய்யவர்காந்தி தோன்றி
தல்லலை யகற்றிவித்தார் ஆசியாகண்ட மகாத்மா

எழுவான் படுவான் எல்லாம்
எங்களின்முடிதான் என்று
தழுவலாய் ஆட்சிபூண்டு தாங்கொணுக்
கொடுமை கொண்ட
மழுவனும் பிரிட்டிஸ்பூதம் மண்கவ்வ பாரதத்தை
வழுவிலா சுயாட்சிகண்ட மாதவன் காந்திமாதோ

**எம்.பீ.எம்.முகம்மது காசீம்**

முகம்மது காசீம் ஆலிம், எம். பி. எம்.

**பிறப்பு:** விடத்தல் தீவு, மன்னர், மாசி, 1914.

சமய சமூக சேவையாளரும், பழந்தமிழ் முஸ்லிம் இலக்கிய விரிவுரையாளருமாவர். 'தமிழ் முழக்கம்' என்ற விருதினைப் பெற்றவர்.

## பூ: பதினாறு

பொய்யே புகலா அரசியல் ஞானி
பொல்லாங் கெதையும் சொல்லா மாணி
உயர்க மானுடம் என்றே உரைத்தான்
ஒற்றுமைக் காக உயிரைக் கொடுத்தான்
பெய்யும் மழையாய் பெருகும் நதியாய்
பூமிசெ ழிக்க வாழ்ந்த மேலோன்
எய்துமி வற்றால் எம்மான் காந்தி
இருபதாம் நூற்றாண்டின்மா மனிதன்

திண்ணிய மனத்தால் அஹிம்சை தன்னை
சீரிய போரா யுதமாய் எடுத்தான்
உண்ணு நோன்பால் உலகைக் கவர்ந்தான்
உணவால் உடையால் எளியத ரத்தான்
புண்ணிய வசத்தால் இந்திய மண்ணில்
பிறந்தோன் தொண்டால் உலகப் பொதுவன்
எண்ணும் இவற்றால் எம்மான் காந்தி
இருபதாம் நூற்றாண் டின்மா மனிதன்!

**கவி.கா.மு.ஷெரீப்**

ஷெரீப். கவி, கா. மு.
**பிறப்பு:** அபிவிருத்தீஸ்வரம், தஞ்சை, தமிழ்நாடு, 11-9-1914.

அமுதக் கலசம் (கவிதை), விதியை வெல்வோம் (நாவல்), புதுயுகம் (நாடகம்) முதலிய நூல்களின் ஆசிரியர். 'தமிழ் முழக்கம்' பத்திரிகையின் ஆசிரியருமாவர்.

# பூ: பதினேழு

ஓசை இன்மை கொண்டமைந்த தொருகுகை;
அதனுள் அடக்கிய அசைவிலா ஒரு குரல்;
உனது திரத்துப் பறித்த விண்மீன்களால் —
அந்தக் குரலின் நடுவை நீ அதிர்த்தனை

வண்டிச் சில்லடிப் புழுதி ஆவதை
ஆக்கினை, ஊழி யொன்முக—
எங்களுக்குரிய நாளைய ஊழியாய்

வழிகளின் முடிவைக் குறிப்பதற் காக
விளக் கெடுத்து நீ பிடிக்கின்றனை;
வெண்ணிழல் புதிதவை வீசும்
புதிய பாதைகள் தொடங்குதற் கென்வே.

**ஸி.வி.வேலுப்பிள்ளை**

வேலுப்பிள்ளை. ஸி. வி.

**பிறப்பு:** மடக்கோம்பரை, மலைநாடு, இலங்கை, 1914. பரம்பரைக் கவிஞர்கள் குடும்பத்தில் பிறந்துள்ள இவர், ஆங்கிலத்திலேயே அதிக்மாக எழுதுபவர். **"In Ceylon's Tea gardens"** என்ற இவரது க்விதை நூல் சர்வதேசப் புகழ்பெற்றது. மலையக வாழ்க்கையை வைத்து அநேக நாவல்கள் எழுதியுள்ளார். இலங்கைப் பாராளுமன்றத்தின் அங்க்த்தவராக்வும் பணியாற்றியுள்ளார்.

## பூ: பதினெட்டு

தருமத் துருவே வருக மறம்
சரித் தோய் வருக சபர்மதியின்
தவமே யவனே வருக பெருஞ்
சாயுச் சியனே வருக என்றும்
திருவைக் கருதா முனி வருக
திருவள் ளுவனே வருக அன்பு
திகழுங் கருணு கர வருக
சேய்நா டும்தன் தளையறுத்த
பெருமைக் குரியோய் வருக மனப்
பீடா திபனே வருக எங்கள்
மருமத் துயிரே வருக மணி
வண்ணு! வருக பாரதத்தின்
மகனே வருக ''நூற் ருண்டு''
மகாத் மா வருக! வருகவே!!

**ஆ. இராமுப்பிள்ளை**

*இராமுப்பிள்ளை. ஆ. வைத்தியகலாநிதி*

**பிறப்பு:** *நயினுதீவு, இலங்கை, 1-12-1914.*

*ஆயிரத்துக்கு மேற்படக் கவிதைகள் பாடியுள்ளார். 'நயினை நாகபூஷணி திருவோலக் காட்சியும் அவள் மாட்சியும்', 'நயினை கந்தவேள் அருள் வேட்டல்' ஆகிய கவிதைகள் நூலுருப் பெற்றுள்ளன.*

# பூ: பத்தொன்பது

பரம்பொருளின் பணிமனையே உலக மென்று
பதியவைத்து அதற்கேற்பத் தியாக வாழ்வின்
விரதமேற் கொண்டுமலர் நுகர்தல் போல
மிகமகிழ்ந்து பணிமுடிப்பார் மேதகை எம் காந்தி!

பளிங்கினிலே சிலைவடிக்கும் சிற்பி போன்ற
பக்குவத்தில் வாழ்வுதனை வகுத்தார் காந்தி!
உளிகொண்டு வெறுங்கல்லைக் கொத்தி மாற்றி
உயிர்ததும்பும் எழில்உருவம் சமைத்தார் காந்தி!

**முகவை இராஜமாணிக்கம்**

இராஜமாணிக்கம். முகவை, **B. A.**
**பிறப்பு:** இராமநாதபுரம், தமிழ்நாடு, 25-7-1915.
எழுத்தாளரும், சினிமா வசனகர்த்தர்வுமான இவர் ஜனநாயக சோஷலிசவாதியுமாவர். மதுரைத் தமிழ்ச் சங்கப் பதக்கம் பெற்றவர்.

## பூ: இருபது

அகிம்ஸையும், சத்யம்; இருகால்கள்! இணைய
அலைபோல் அமைதிக் கரை நோக்கி,
தகைவிடி வெள்ளி உரை வாக்கில் — மலரும்
தனிவழிக் கண்டேன் வரும் நாள்கள்...
கனியரே, தீபந் தரும் வாள்கள்...

இடமும், கணமும், இணைவாச்சு; உலக
இரட்டைச் சுழலில் மழை நூற்பு!
தொடரும் நதிகள் விழை ஆர்ப்பு! அறிவின்
சுதந்தர ஆழி கணை; மூச்சு!
துதி, ரகுராமம் புணை யாச்சு...

பனியின் துளி, ஒளிர் முத்தெயுதே! — அடிமைப்
பனிப்பு நிலாபத முற்றிடவே,
அணியாம் பரிவினைப் பெற்றிடவே, — எனிலே
அலர்ந்தது? ஆத்தும சத்தியதே...!
கலந்த துகண் அருட் சித்தியதே...!

**கம்பதாசன்**

கம்பதாசன், இயற்பெயர், ராஜப்பா, சீ. சு.
**பிறப்பு:** உலகாபுரம், தமிழ்நாடு, 15-9-1916.
'கனவு', 'கம்பதாசன் கவிதைகள்' (கவிதை நூல்கள்), வெகுமதி (சிறுகதைகள்), ஆதி கவி (நாடகம்) முதலிய பதினைந்து நூல்களின் ஆசிரியர்.

# பூ: இருபத்தொன்று

உலகெலாம் போற்றும் உத்தமன் காந்தி,
உண்மையின் உயிர்ப்பென உற்றோன்;
பலநலஞ் சிறக்கும் பாரதத் தாயின்
பண்பெலாந் திரண்டுவந் துதித்தோன்;
விலகிவெஞ் சமரும் வேறுளப கையும்
விதிர்விதிர்த் தோடியே ஒதுங்க,
நலமெலாஞ் சிறக்கும் அஹிம்சாதர் மத்தை
நாட்டிய நற்பெருந் திறலோன்.

சத்தியாக் கிரக தர்மம தொன்றைத்
தரணியோர் தாமறிந் துய்ய
எத்திற மாக இயற்றுதல் வேண்டும்
என்றுநீ இயற்றினை ஐயா!
சுத்தவீ ரத்தாற் சுதந்திரத் தாயைத்
தூய்மையாய்ப் பெறவருள் தூயோய்!
அத்தமும் வாழ்வும் அநாதர வாய
அடிமைகள் மிடியழித் தனையே.

**செ.சிவப்பிரகாசம்**

*சிவப்பிரகாசம். செ, பண்டிதர்*

**பிறப்பு:** *தாவடி, இலங்கை, 8-10-1916.*

*'சிதம்பரச் சிறப்பு', 'தில்லையந்தாதி', 'பராசக்திமாலை' முதலிய ஏழுநூல்களின் ஆசிரியராவர்.*

# பூ: இருபத்திரண்டு

சொல்லிய வண்ணஞ் செய்தார்
துணிவொடு நன்மை செய்தார்
நல்லவர் ஆக்கு தற்குத்
தம்மையே வருத்தி நின்றார்
இல்லறத் துறவி யானார்
இலங்கி டும் சத்தியந்தான்
வல்லதோர் தெய்வம் என்றார்
வாழ்க்கையில் அறிந்து கொண்டோம்.

சத்திய யுகத்தில் நின்றான்
சாந்தத்தின் வடிவ மாவான்
உத்தமன் காந்தி மன்னன்
உழைத் திட்டான் தீண்டாமைக்கு
மெத்தவும் பேசு கின்றோம்
மேன்மையாய் நெஞ்சி லில்லை
இத்தினம் எண்ணு வோமா?
ஏழைகள் நண்பன் ஏக்கம்.

**சோதி**

சோதி, இயற்பெயர்: தியாகராஜபிள்ளை. சோ.
**பிறப்பு:** கரம்பன், ஊர்காவற்றுறை, இலங்கை, 1919.
கலாமோஹினி, கிராம ஊழியன் முதலிய பத்திரிகைகளின் தொடர்புடன் அக்காலத்திலேயே எழுத்துத் துறைக்கு வந்தவர். "ஈழகேசரில்"யில் கவிதைப் பகுதியைத் தொடங்கி வைத்த பெருமை இவருக்கு உண்டு. சிறுவர்க்கான பாடல்களிலும், இலக்கிய விமர்சனத்திலும் ஈடுபாடுடையவர்.

# பூ: இருபத்து மூன்று

அன்போ டகிம்சைசேர் சத்தியம் — என்ற
அரிய படைப்பலத் தாற்பிறர்
துன்பப் பகைப்புலம் வென்றுதன் — பேரைத்
துலக்கி மறைந்த மகாத்துமா
மண்ணிற் பிறந்தநூ ருவது — ஆண்டை
மதித்துத் துதிக்குமிவ் வேளேயில்,
அண்ணல் இலட்சிய சாதனே — யாவும்
அறிந்தகி லஞ்செயலாற்றுமோ?

சாதி மதநிறச் சண்டைகள் — எல்லாம்
சகத்தில் ஒழிந்திட வேண்டுமே;
நீதி சமத்துவ நேர்மைகள் எங்கும்
நிலேத்துத் தழைத்திட வேண்டுமே;
ஆதி பகவனே நம்பியே—மக்கள்
அரசும் பலம்பெற வேண்டுமே;
கோதில் மகாத்துமா கொள்கைகள்—சாந்தி
கொடுக்கும் மருந்தென வேண்டுமே!

**சாரதா**

சாரதா இயற்பெயர்: சரவணமுத்து. இ.

**பிறப்பு:** உரும்பராய், இலங்கை, 12-2-1919.

'கிராம ஊழியன்' பத்திரிகையிலே முளேவிட்டு, ஈழ கேசரிப் பண்ணேயிலே வளர்ந்தவர். 'சுவர்க்க பூமி' முதலிய சிறு காவியங்களும் படைத்துள்ளார். 'இரட்டையர்' 'மகேஸ்வரன்' என்பன இவருடைய பிற புனேபெயர்கள்.

## பூ: இருபத்து நான்கு

அழுக்கு நீக்க ஆறு சென்று
புழுதி பூசிய கழுதை போல
மனிதன் தன்னில் மயங்கி நிற்க
புனிதன் காந்தி புவியில் தோன்றி
அடலும் அடங்கும் அன்பு செய்ய
கடலும் ஒடுங்கும் கரையைச் சேர
'சிந்தனை செய்திடு சிறக்கு மெண்ணம்'
என்று கூறி எடுத்துக் காட்டி
துன்பம் போக்கி துணிவு கூட்ட
உண்மை கண்டு உவந்த மாந்தர்
கண்ட கொள்கை காந்திய மென்று
தண்ணொளி நேயம் தரணியில் ஓங்க
மண்ணிலே பொறுமை மங்கலஞ் செய்ய
எழிமையுந் தூய்மையும் எழிலுடன் வாழ
வழியொன் றன்றே வகுத்தனர் தாமே!

**கமலபூஷணி திருநாவுக்கரசு**

கமலபூஷணி திருநாவுக்கரசு **B. A.**

**பிறப்பு:** மட்டக்களப்பு, இலங்கை, *1-11-1919.*

ஆழ்ந்த இலக்கிய ரஸனையுள்ள இவர், ஆனைப்பந்தி பெண்கள் ஆங்கிலப் பாடசாலையின் அதிபராக அமர்ந்து கல்விப் பணி புரிந்து வருகின்றார்.

# பூ: இருபத்தைந்து

வெண்மை கருகிடும்
　　　　வெங்கலி யுகத்தினில்
உண்மை குறுகிடும்
　　　　உண்மை உணர்த்தினே
கேடுகள் தீர்த்திடும்
　　　　கிருத யுகத்தினே
கூடுமிக் காந்தியின்
　　　　கோல யுகமென
கூட்டிக் கலந்திடு
　　　　கூனலே நிமிர்த்திடு
கேட்டினேப் போக்கிட
　　　　கேக்குவன் இறைவனே.

**கே. கணேஷ்**

*கணேஷ், கறுப்பண்ணபிள்ளை*

**பிறப்பு:** *அம்பிட்டி, கண்டி, 2-3-1920.*

*நீண்டகாலமாகப் பத்திரிகையாளராகப் பணியாற்றி எழுத்துத் துறையில் அனுபவம் பெற்றவர். முல்க்ராஜ் ஆனந்த், கே. ஏ. அப்பாஸ், கிருஷ்ண சந்தர் ஆகியோருடைய எழுத்துக்களைத் தமிழில் அறிமுகப்படுத்தியவர். 'தீண்டாதான்', 'குங்குமப்பூ' ஆகிய இரண்டும் நூலுருப் பெற்றுள்ளன.*

## பூ: இருபத்தாறு

காரிருள் சூழ்ந்த நாட்டில்
கதிரொளி பரவச் செய்யச்
சூரிய உதயம் போலத்
தோன்றினை அமர காந்தி
பாரத தேசந் தன்னில்
பனியென அடிமை நீக்கும்
காரியம் தீர்ந்த தென்றே
கண் மறைந்தாயோ அண்ணல்!

புரட்சியின் வழி செல்லாமல்
பொதுமையில் உடைமை பேண
உரைத்தனை தரும கர்த்தா
ஒரு பெருந் தத்துவத்தை!
திரட்டியே குவிக்கும் செல்வர்
திருடராய் மாறும் இந்நாள்
வரட்சியால் வா டுகின்றோம்!
வள்ளலே, வருக மீண்டும்!

**கு. மா. பாலசுப்ரமணியம்**

பாலசுப்ரமணியம், கு. மா.

**பிறப்பு:** வேளுக்குடி, தஞ்சை, தமிழ்நாடு, 14-5-1920.
'இன்பத் துளிகள்', 'சூடிய மலர்' (கதைத் தொகுதிகள்), 'காதல் தந்த இன்பம்' (நாடகம்) ஆகிய நூல்களின் ஆசிரியர். திரைப்படங்கள் பலவற்றிற்குப் பாடல்கள் இயற்றியுள்ளார்.

# பூ: இருபத்தேழு

காந்தியம் வெல்கவென்று சங்கூதுவோம் — எங்கும்
சாந்தி நிலவவென்று சாலவூதுவோம்
காந்திய தத்துவங்கள் வாழ்கவென்றே — நம்
காட்சிமிகு இவ்வுலகில் சங்கமாகுவோம்.

சாந்தமே இன்பமென்று சங்கூதுவோம் — அதில்
சன்மார்க்கம் பொருளென்று சாற்றியூதுவோம்
காந்தியத் தெய்வநெறி காசினியெங்கும் — கவின்
கலையா யொளிரவொரு கழகமாகுவோம்.

**நா. சிவபாதசுந்தரம்**

சிவபாதசுந்தரம் நா, புலவர்
**பிறப்பு:** தொல்புரம், இலங்கை, 30-5-1920.
'பாரதிச் சுடர்', 'காந்திய நோக்கு', 'மறக்குடி மாண்பு' முதலிய நூல்களின் ஆசிரியர்.

# பூ: இருபத்தெட்டு

**பூ**வுல கத்திற் புகழை வைத்துத்
தேவுல கத்திற் றிகழும் பெரும!
காந்தி யென்னு மேந்தலே! வாழுந்
தீந்தமிழ்ப் பாட்டிற் சேர்ந்த சீரிய!
பிறவியி லுயர்ந்த மனிதப் பிறவியில்
நிறையும் புகழை நிறுத்திச் செலலே
பிறந்த பயனெனப் பிறர்க்குக் காட்டிச்
சிறந்த செம்மலே! சிந்தையுஞ் சொல்லுஞ்
செயலுந் தீமை சேரா திருக்கும்
நயனுறு வாழ்வு நடத்திய நல்லோய்!
மானிட வடிவில் வந்த தெய்வமோ
ஊனுடம் பெடுத்தோர் எவரினு முயர்ந்த
மனிதமா ணிக்கமோ மகாத்து மாவோ
புனிதனே யுன்னை யெங்ஙனம் புகழ்வேன்?
வாழ்க்கைத் திறமெலாம் வகையுற வாழ்ந் தென்
வாழ்க்கைக் கேற்ற வழிகாட்டி யான
மோகன தாச! முழுமைக் குணமாம்
மாகடல் நீயே! மாமலை நீயே!
உன்னையே யென்னி லுயிரா
யெண்ணி யிருப்பே னெந்நா ளிலுமே!

**அ. இளங்கோவன்**

இளங்கோவன், அ. நல்லைக்கவி
**பிறப்பு:** நல்லமுத்தன்பட்டி, இராமநாதபுரம், தமிழ்நாடு, 15-8-1920.
நல்லவை நாற்பது, குழந்தை உள்ளம், மலராத வாழ்வு ஆகிய நூல்களின் ஆசிரியர். அருணசலேஸ்வரர் வித்தியா சாலை நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியராகக் கல்விப் பணி புரிந்து வருகின்றார்.

## பூ: இருபத்தொன்பது

மாந்தருக்கு மத்தியில்
மாபெரும் அஹிம்சையை
ஏந்தி வந்த காந்தியே
எங்கு சென்று வாழ்கிருய்!

பாரதத்துப் பூமணீ!
கூஜரத்துக் கோமணீ!
மேலகத்து மாமணீ!
மேதை எங்கள் காந்தியே!

நீணிலத்தில் உந்தனின்
நினைவு நாளும் கிட்டவே
நீ பிறந்த வூரிலே
உதிர வாரி யோடுதே.

சாந்தி மூர்த்தி காந்திநீ
சாற்றி நின்ற காந்தியம்
மாய்ந்திடாது காத்திட
மக்கள் இங்கு வேண்டுமே!

**எம்.எஸ்.எம்.ஹரீஸ்**

ஹரீஸ், முகம்மது சாபி முகம்மது

**பிறப்பு:** காலி, இலங்கை, 14-2-1921.

அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் தலைமைத் தமிழ்ப் போதகாசிரியராக அமர்ந்து தமிழ்ப்பணி செய்வதுடன், உளவியல் சரித்திரம் முதலிய பாடங்களும் போதிக்கின்ருர்.

# பூ: முப்பது

வள்ளலே! காந்தி! மகாத்மா! வாழ்கநீ!
தெள்ளிய உன்றன் தேர்ந்த அகிஞ்சை
கொடிய நெஞ்சரின் கொடுமை வென்றதே!
நெடிய அடிமை நீள்விலங் கொடிந்ததே!
அறியா மையிருள் அழிந்ததே மாற்ருய்
நெறியும் நேர்மையும் நிலைபெறச் செய்து
உலகுக் கோர்கதிர் ஒளியாய்த் திகழ்ந்ததை
நலமாய்க் கண்டோம்! நற்ருள் வணக்கம்!
வேற்றுமை கலந்து வெற்றி கண்டோய்
நூற்ருண் டின்விழா நோக்க இன்பம்!
ஆயினும் நீயோ அவனியில் இல்லை
பாயிருள் போக்கும் பருதியே நீயும்
மறைந்துள் ளாய்ஆம்! மறுபடி மீண்டும்
நிறைந்து பூமிநிலை பெற வருவாய்
என்பதால் மகிழ்விழா எடுத்தோம்
துன்பம் துடைக்கத் தோன்றுக வையமே!

**எம்.எஸ்.கமலா**

கமலா. எம். எஸ்.

**பிறப்பு:** சென்னை, தமிழ்நாடு, 7-4-1922.

'கன்னித் தெய்வம்', 'காதற் கோவில்' (சிறுகதைகள்) 'மனித தெய்வம்' (நாவல்) ஆகிய பல நூல்களின் ஆசிரியர். பழம் பெரும் பெண் எழுத்தாளரான இவர், தமிழ் எழுத்தாளர் சங்கச் செயலாளராகவும், துணைத் தலைவரா கவும் நற்பணி புரிந்துள்ளார்.

# பூ: முப்பத்தொன்று

தன்னலங் கருதாது தாய்நாட்டி லுறைமக்கள்
தக்கபய னெய்தி வாழத்
தாரணியி லன்பஹிம் சையுண்மை யிவைகளாந்
தகுபடைகள் கொண்ட அண்ணல்;
அன்னியரி னாட்சிதனை யடியோ டகற்றியிகழ்
அடிமையாந் தளையை வெட்ட
அரியசத் யாக்கிரக மவனிதிகி லெய்தவே
அஹிம்சைவழி செய்த அண் ணல்;
துன்னிவள ருங்கொடிய தீண்டாமைப் பேயி னைத்
துரத்திவெகு வெற்றி காணத்
துன்பமுற் றுளம்நொந்து துயர்கொண்ட ஹரிசனர்த்
தொண்டினைச் செய்த அண்ணல்;
இன்னல்செய் பகைவரை இனியநல் லன்பினால்
இதமுடைய நண்ப ராக்கி
இப்பெரிய வகிலமே ஏத்தியேத் திப்புகழ
இசைகொண்ட அண்ணல் அம்மா!

**மு.க.சூரியன்**

சூரியன். மு. க., கவிஞர்

**பிறப்பு:** கோப்பாய், இலங்கை, 5-5-1922.

'கதிரேசன்பாமாலை' 'முடிமன்னர் பதிகம்' ஆகிய எட்டு நூல்களின் ஆசிரியராவர்.

## முப்பத்திரண்டு

ஆத்மீக நெய்நிறைத்தே அறிவுச் சுடர்தூண்டிச்
சாத்வீக நல்லொளியைத் தரணியில் — ஏத்தியநம்
தந்தை மகாத்மாவின் தாளின் வழிச்சென்றே
நிந்தையின்றி வாழ்வோம் நிலைத்து.

**வே. ஐயாத்துரை**

*ஐயாத்துரை. வே.*

**பிறப்பு:** *யாழ்ப்பாணம், இலங்கை, 2-2-1923.*

*நாடகம், கவிதை ஆகிய இரு துறைகளிலும் ஈடுபட்டுழைத்துவரும் இவர், யாழ் இலக்கிய வட்டத்தின் வளர்ச்சியிலும் அக்கறை உடையவர்.*

# பூ: முப்பத்து மூன்று

அணுஜலக் குண்டால் வாளால்
அடைந்திடா சுதந்திரத்தை
துணிவொடு அகிம்ஸை யென்ற
தூய்மைசா லாயுதத்தால்
கனிவொடு பெற்றுத் தந்த காந்தி
நூற்ருண்டை யின்று
இனிமையோ டஞ்சலித்து அவரடி
தொற்றி வாழ்க.

ஆங்கில ஆட்சியன்று அடக்கியாள்
கொடுமை கண்டு
வீங்கிடத் தோள்புடைக்க
வீறுகொண் டார்ப்பரித்து
தீங்குடை ஜாதிபேதம் தீயென
வெறுத்த காந்தி
ஈங்கு நூற்ருண்டுகாண எழுந்தனை
வாழ்க நின்றே.

ஈழமேகம் பக்கீர்த்தம்பி

பக்கீர்த்தம்பி, முகம்மதிஸ்மாலெப்பை

**பிறப்பு:** சம்மாந்துறை, இலங்கை, 6-5-1923.
'உரைமலர்' என்ற நூலை இயற்றியுள்ள இவர், சிறந்த பேச்சாளராகவும் விளங்குகின்ருர். 'ஈழமேகம்' என்ற பட்டம் இவருக்குக் காயல் பட்டணத்திற் கிடைத்தது.

# பூ: முப்பத்திஞலு

அகிம்சா மூர்த்தியாம் அந்தணன், அமரஞய்
மகிழ்ந்தே வானரும் வணங்குமா மன்னவன்,
சத்தியம் பகர்ந்து சுதந்திர தனங் கொளும்
வித்தக வணிகன், விரகிஞல் உலகில்
சமத்துவ சகோதர ரத்துவ விளைவினை
எமக்கெலா மீந்தருள் வேளாண்மை யாளன்,
''பண்டைப் பெரியோர் பண்பையும் வாழ்வையும்
கண்டவ ராரிவை கட்டுக் கதை''யெனும்
வீணருந் தெளியநங் கண்முன் விதிவழி
மாணுற வாழ்ந்த மாத்தவ விரதன்,
சதுரங்க பலம்பெறு சாம்ராச்சி யாதிபர்
விதிர்விதிர்த் தோட வென்றிகொள் வீரியன்,
சத்திய ஞாஞ னந்தத் துவப்பொருள்
நித்திய துணையெனும் நிலைதெரி நீதியன்,
உத்தமன், மாந்தருள் ஒருதெய்வ மென்னச்
சத்திய வாழ்வில் தலைப்படு சான்ருேன்
ஆகிய மகாத்மா அண்ணலார் போகிய
நன்னெறி நாமும் நடப்பதே அவர்கள்
பொன்னடி போற்றிப் பூசனை புரிதலாம்;
ஆதலின் அவ்வழிப் போதலே பொருளே.

**ச. சுப்பிரமணியம்**

*சுப்பிரமணியம். சரவணமுத்து, பண்டிதர்.*

**பிறப்பு:** *ஆவரங்கால், இலங்கை, 3-1-1924.*

*'சிவானந்த கலரி' என்ற நூலை இயற்றியுள்ளதுடன், பல வடமொழி நூல்களையும் தமிழாக்கியுள்ளார்.*

## பூ: முப்பத்தைந்து

பிறர்வாழ்விற் பின்பற்றி உய்தற்கான
போதனைக ளத்தனையுந் தியாகியாய்ச் சீர்
பிறழாமற் சாதனைக ளாக்கிக் காட்டும்
பெருந்தலைவர்க் கிலக்கணனே! மனித வாழ்வு
சிறப்படையத் தனிமனிதன், குடும்பம், சிற்றூர்,
தேசம், உலகம் தலைவர், தொண்டர் நெஞ்சில்
அறநெறி, சத் தியம், அகிம்சை, கூட்டுவாழ்வு,
ஆத்மீக சக்தி, தொழில், பொருளாதாரம்,
அறிவு, கல்வி, ஆற்றல், அன்பை (ப்) பசுமரத்தின்
ஆணியதாய்ப் பதித்தவனை மறக்கப் போமோ!

மாந்தருய்ய வழிகாட்டும் ஒளிவிளக்கே!
மகாத்மாவே! ஆத்மீக சக்திதன்னைக்
காந்தசக்தி தனிலுயர்ந்த சக்தியாக்கிக்
காசினியைச் சுயநலத்தாற் சீரழித்த
வேந்தர்களை நாற்படையை ஆயுதத்தின்
வீருப்பைப் பலாத்காரந் தன்னையெதிர்த்துச்
சாந்தவழி தனிலகிம்சைக் கவசந்தாங்கிச்
சத்தியப்போர் புரிந்து வென்று சுதந்திரத்தை
ஈந்தகலங் கரைவிளக்கே! காந்தீ! நின்னை
இவ்வுலக முள்ளளவும் மறக்கப் போமோ!

**வன்னியூர்க்கவிராயர்**

சவுந்தரநாயகம், சந்தியோகு லோறன்ஸ்

**பிறப்பு:** இலுப்பைக்குளம், இலங்கை, 4-4-1924.

கவிதை–சிறுகதை ஆகிய துறைகளிலே ஈடுபாடு கொண்டு உழைத்துவரும் வன்னியூர்க்கவிராயர், வைத்தியராகப் பணிபுரிகின்றார். சிறந்த தமிழபிமானி.

## பூ: முப்பத்தாறு

ஆயிரத்தோ டாயிரத்தை நூறுண் டுக்கும்
அப்பால்இக் குவலயத்தில் கொல்லா நோன்பின்
பாயிரமாய் உதித்தமகான் கரம்சந்த் காந்தி
பண்டொருநாள் பீகாரின் கிராமம் ஒன்றில்
போயிருந்தங் (கு) அறப்பணியைச் செய்யுங் காலை
புனிதமிகும் தேவிக்குப் பலியாய் நின்ற
கோயில்முன் ஓர்ஆட்டைக் கண் டார். 'ஏன்இக்
கொடுமை'யென அவர்வினவ, மக்கள் சொல்வார்:

'தேவியினை மகிழ்விக்கும் வழிஈ' தென்றே.
'செகத்தினிலே ஆட்டைவிட மனிதன் தானே
யாவினிலும் சிறப்புடையோன்' என்றார் காந்தி.
'ஆம்'என்றார். 'பின்ஏன்அம் மனிதன் தன்னை
தேவிக்குப் பலியாகத் தருவ தில்லை?'
திருமகனின் கேள்விக்குப் பதிலே இல்லை!
'ஆவியினை நான்தருவேன் ஏற்பீர் என்னில்
ஆட்டிற்குப் பதில்என்னை வெட்டும்' என்றார்.

**பூங்குன்றனார்**

எபநேசர், ஞா.

**பிறப்பு:** மதுரை, தமிழ்நாடு, 7-12-1924.

கடந்த 25 ஆண்டுகளாக எழுதித் தமிழ்பரப்பிவரும் கவிஞர். விடுதலைப் போராட்டத்தில் சிறை சென்றவர். இராமநாதபுரம் தமிழ்ச் சங்கம், மதுரைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் ஆகியவற்றின் தலைவராக அமர்ந்தும் நற்றமிழ்ப்பணி ஆற்றியுள்ளார்.

## பூ: முப்பத்தேழு

வேந்தர்க்கு வேந்தனும் வீரர்க்கு வீரனும்
வெற்றித் திருமகனும் — ஏழை
மாந்தர்க்குத் தன்னையே ஈந்த மகாத்துமா
மனிதரில் தெய்வம் என்றேன் — நானும்

காணாத காந்தியைக் கண்டவன் போலவன்
காதலனாகி நின்றேன் — சொல்லத்
தோணாத வேகம் என்உள்ளத்தின் ஆழத்தோர்
தீயை வளர்க்கக் கண்டேன் — அது

வீணாக வில்லை யின்றெந்தன் தமிழ்க்குல
வெற்றி விடுதலைக் கோர் — உறுதி
நாணாகச் சத்தியக் காண்டீபத்தில் தமிழ்ச்
''சக்தீ''யம் பாச்சு தடா.

**சக்தீ**

பாலையர், சக்தீ அ.

**பிறப்பு:** மலைநாடு, இலங்கை, 1925.

ஓவியக்கலைஞர், கலைப்போதகாசிரியர், கவிஞர், எழுத்தாளர் எனப் பல்வகையிலும் பணியாற்றி வருகின்றார்.

## பூ: முப்பத்தெட்டு

இறைவழியை நிறைவழியாய்
ஏற்றுக்கொண்ட பாரதம்
ஈன்றமகன் காந்திவாழ்வு
சத்தியத்தின் தாயகம்
வரையறுத்த வாழ்க்கையோடு
வாழ்ந்துகாட்டி விடுதலை
வாங்குதற்கு உலகமெங்கும்
வழிவகுத்தார்; வாழ்கிறார்.

நிறவெறியின் கொடுமைகண்டு நிறைந்த
தியாக விளிம்பிலே
நின்றஅண்ணல் உறுதிகண்டு
நிலைகுலைந்தார் தீயவர்
கறைபடிந்த அகத்தைத்தனது
கனிவினாலே துடைத்ததால்
காலம்வென்று ஞாலத்தோடு
காந்தியென்று வாழ்கிறார்.

**சோமசன்மா**

அண்ணாமலை. ம். சு.

**பிறப்பு:** பத்து பகாட், மலேசியா, 1925.

கவிதை – கட்டுரை ஆகிய இரு துறைகளிலும் ஈடுபாடுடைய இவர், தமிழாசிரியராகவும் பணிபுரிந்து வருகின்றார்.

# பூ: முப்பத்தொன்பது

சத்தியத்தின் வடிவாகித் தரணிமிசை வந்தார்!
தருமவழி பாரதத்தைத் தாம்நடத்தித் தந்தார்!
நித்தியத்தைத் தரும்அன்பை நெஞ்சமதிற்
கொண்டார்!
நீளடிமை தவிர்த்திடவே நெறியகிம்சை கண்டார்!

காந்திமகாத் மாவென்னும் கனத்தபுகழ் நிறைந்தார்!
கருணைநிறை சிந்தையராய்க் காலமெலாம் சிறந்தார்!
சாந்திக்கு வித்தாகிச் சமத்துவத்தைப் புகன்றார்!
சரியில்லாத் தீண்டாமை தனைத்தவிர்த்து நின்றார்!

ஏசு, நபி, புத்தரென இயம்புவண்ணம் மிளிர்ந்தார்!
இறையான்ம நாட்டமுடன் எக்காலும் ஒளிர்ந்தார்!
தேசுமிகும் உத்தமராய்த் திகழ்ந்துபணி புரிந்தார்!
தேசநலம் போற்றியென்றும் தீனருக்காய்ப்
பரிந்தார்!

**என். எஸ். சிதம்பரம்**

*சிதம்பரம். என். எஸ்.*

**பிறப்பு:** *சிக்கல், தஞ்சை, தமிழ்நாடு, 6-12-1925.*

*'இசைக்கனிகள்' 'தமிழிசைப் பாடல்கள்' முதலிய ஐந்து நூல்களின் ஆசிரியர், 'செட்டிநாடு' வார இதழின் ஆசிரியராகவும் பணியாற்றியவர்.*

## பூ: நாற்பது

சத்தியம் தவறு வேந்தன்
சரிதையுள் ஆழ்ந்து வந்தேன்
சாந்தியால் சூழ்ந்து வந்த
காந்தியின் உதயம் கண்டேன்
புத்தனுள் புகுந்து வந்தேன்
புவிஉயிர்த் துன்பம் தீர்க்கும்
புதுமையாம் அமுத முண்டு
புனிதனுய் காந்தி நின்ருன்.

சிலுவையில் உயிரை விட்டோன்
சீவியப் பாதை கண்டேன்
சிந்தையில் தூய அன்பால்
சீவரில் தெய்வம் காணும்
சிறப்புறு உண்மை தந்தோன்
சென்றதோர் அடிச் சுவட்டில்
சென்றிடும் காந்தி தன்னைச்
சிந்தையால் நன்கு கண்டேன்.

**ஆரையூர் அமரன்**

*அமரசிங்கம், கே. ஆரையூர்*

**பிறப்பு:** *ஆரையம்பதி, இலங்கை, 9-4-1926.*

*அரையம்பதி கிராமச் சங்கத் தலைவராக இருந்து சமூகப் பணி புரிந்தவர். நாடகத்திலும், கவிதையிலும் மிகுந்த ஈடுபாடுடைய இவர் ஓர் உணர்ச்சிக் கவிஞராவர், 'திருமலைக் குரல்' 'அறப்போர்க் குரல்' ஆகிய கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார்.*

## பூ: நாற்பத்தொன்று

அகிம்சையெனு மாயுதத்தின் கூர்மை வேலை
அனைத்துலக நெஞ்சகத்தில் ஆழப் பாய்ச்சி
பகிரங்க அறப்போரில் பார தத்தைப்
பணியாற்ற வழிவகுத்துத் தலைமை யேற்று
அகிலமெல்லாம் விழிப்படைய விடு தலையை
அன்னையவள் பாரதத்திற் கேற் படுத்தி
தகுதிநிறை வித்தகரா யுலக மெங்கும்
திகழ்ந்தவொரு உத்தமரே காந்தி யண்ணல்.

மேநாட்டு மோகத்து ளாழ்ந்து நாட்டின்
மேம்பாட்டை மறந்தவர்க்குத் தெளிவைக் காட்டி
எல்லோரு மிந்நாட்டு மன்ன ரென்று
எழுச்சிகொளச் செய்துரிமை அடையச் செய்து
நல்லாரும் பொல்லாரும் உவந்து ஏற்கும்
நற்குணத்தின் பிறப்பிடமாய் வாழ்ந்த அண்ணல்
இல்லையிங்கு இந்நாளி னிழிவைக் காண
என்றுமவர் ஆன்மாவில் சாந்தி வாழ்க.

**து.பதுறுதீன்**

*பதுறுதீன், து.*

**பிறப்பு:** *கிண்ணியா, இலங்கை, 1926.*

*வருமான, வேலைமேற்பார்வையாளராகப் பணியாற்றும் இவர், சிறந்த இலக்கிய ரசிகர்.*

## பூ: நாற்பத்திரண்டு

அரசியலாளர் அநேகரை அறிவோம்;
(கொழும்பிலே பெரிய கொட்டகை உள்ளே
கண்டி அரசரின் கைவாள் கண்டுளோம்;
பல்லவர் அணிந்த பட்டு வேட்டியும்,
முகலா யர்களின் கவசமும் முடியும்,
சீச ருடைய சிகையலங் காரமும்,
சேர்ச்சிலார் சுவைத்த சுருட்டும் தெரியும்)
தடித்த கதர்த்துணிச் சட்டையும் தொப்பியும்,
கறுப்புக் கோட்டும் கழுத்துப் பட்டியும்
அவர்களின் மெய்களை அதிகம் மறைப்பன.
மறைக்கவும்,
சூம்பிய கால்களும் தோள்களும், திறந்த
நெஞ்சுமாய் நிமிர்ந்தவன் நிழலை
அஞ்சினேம்; மீண்டும் ஓர் அறம் சரிந்ததுவே,

**மஹாகவி**

*உருத்திரமூர்த்தி, து.* **C.A.S.,**

**பிறப்பு:** *அளவெட்டி, இலங்கை, 9-1-1927.*

*ஈழத்து இளம் கவிஞர்களுக்கு ஆதர்சனக் கவிஞராக விளங்கும் 'மஹாகவி' புதியன படைத்துத் தமிழ்க் கவிதை வளமூட்டுவதில் முதல்வராகத் திகழுகின்றார். 'குறும்பா', 'வள்ளி', 'கண்மணியாள் காதை' ஆகிய கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார்.*

## பூ: நாற்பத்து மூன்று

அன்பறம் உண்மை அருண்மை இறைநினைவிற்
பொன்றாத நம்பிக்கை பூண்டொழுகித் - தன்னலத்தை
முற்றத் துறந்த முனிவரெங் காந்திமகான்
நற்றலைவ ரன்றோ தனி!

பாமாலை சூட்டிப் பரவுவோம் பன்மலர்ப்
பூமாலை சூட்டிப் புகழுவோம் - நாளெல்லாம்
மன்பதைகள் வாழ வழிகாட்டிச் சென்றார்க்குங்
கென்புருகி நின்றென்று மே!

**சி. வேலுசுவாமி**

வேலுசுவாமி சி.

**பிறப்பு:** கோலாலம்பூர், மலேசியா, *2-4-1927.*

*தலைமை ஆசிரியராகப் பணிபுரியும் இவர், சிறுவர்க்கான தமிழ் நூல்கள் பல இயற்றியுள்ளார். மலாய் – தமிழ் - ஆங்கில அகராதி ஒன்றைத் தொகுத்துள்ளார். மலாய்ச் சிறுகதைகளைத் தமிழாக்கியுள்ளார்.*

## பூ: நாற்பத்து நாலு

கன்னல் தேனுய் கனியாய் அமுதாய்
கண்ணின் மணியாய் கருணை வடிவமாய்
எண்ணும் தோறும் இருமை விளக்காய்
அன்பின் உருவாய் அகிம்சா மூர்த்தியாய்
பண்பின் குன்ருய் பார்புகழ் தெய்வமாய்
ஆத்ம ஜோதியாய் அமர்ந்தனன் அண்ணல்
நீத்தனன் உயிரை நீசனுல் நெஞ்சம்
ஆற்றல் மறந்தது அகிலமே அழுதது
போற்றுக இன்றவன் புனிதநா ருண்டு
வேற்ருெரு காந்தி விழைவனே
சாற்றியே பாமாலை சதாஇறைஞ் சுவமே.

ஐ. பூபாலபிள்ளை

பூபாலபிள்ளை. ஐ.

**பிறப்பு:** அக்கரைப்பற்று, இலங்கை, 18-6-1927.

'வீரகேசரி' பத்திரிகையால் நடத்தப்பட்ட வெண்பாப் போட்டியில் முதற் பரிசு பெற்ற கவிஞன்.

## பூ: நாற்பத்தைந்து

மாந்தரிடை வேந்தன் மறைஞானி பேரறிஞன்
சாந்த குணசீலன் சத்தியத்தை — ஏந்தி
அகிம்சா தருமம் அணியாதுழைத்து தார்
மகிமையுறை காந்தி மகான்

**ஏயாரெம் ஸலீம்**

ஸலீம், அப்துற்றஷீத் ஆலிம் முகம்மது

**பிறப்பு:** அக்கரைப்பற்று, இலங்கை, *18-11-1927.*

இவர் எழுதிய 'ஈழத்து முஸ்லிம் புலவர்கள்' என்ற புலவர் சரித நூலுக்கு ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலத்தின் ஆயிரம் ரூபாய் பரிசு பெற்றார்.

## பூ: நாற்பத்தாறு

வானத்தால் வந்துதித்த மகானு மல்ல
நமைப் போலோர் தாய்வயிற்றிற் பிறந்தபிள்ளை
ஞானத்தாற் சிறந்தாலும் நடையிற் சற்றுத்
தான்விட்ட தவறுணர்ந்தே தனைத் திருத்தி
மானம்ஒழுக் கம்வாய்மை மன அடக்கம்
வாழ்வின்ஒளி விளக்கமென வாழ்ந்த தெய்வ
கானமுயர் குழற்கண்ணன் காதற் சீடன்
கரம்சந்ர மோகனதாஸ் காந்தி மாதோ.

அன்னியப்பே ராட்சியெனும் இருள் கடிந்தே
அழகுசுதந் திரம்பூக்கும் அருணச் சோதி
அன்னையினுந் தான்பிறரை அன்பாற் கொஞ்சும்
அருட்காந்தி நடைப்பயிற்சி விளக்கம் பெற்றால்
மண்ணுடும் விண்ணுட்டாற் சிறந்தி டாதோ
'மக்களிலே தீண்டாதார் ஒருவர் இல்லை'
முன்வாழ்ந்து பின்மொழியும் முதனூல் ஒக்கும்
முத்தாடைக் கதரழகன் முதன்மை யாளன்.

**மண்டூர்க் கவீஞர்**

சோமசுந்தரம்பிள்ளை. மு. மண்டூர்க் கவிஞர்

**பிறப்பு:** *மண்டூர், இலங்கை, 1927.*

*இயற்கையான புலமையுள்ள குடும்பத்திலே பிறந்த இவர் பல பா அரங்குகளிற் கலந்துகொண்டு, அவற்றிற்கு உயிரூட்டியுள்ளார்.*

## பூ: நாற்பத்தேழு

காந்தி நல்லவர் கருணை உள்ளவர்
மாந்தர் வாழ்நெறி வாழ்ந்து காட்டினர்.

தெய்வ சிந்தையும் தேச பக்தியும்
உய்ய உண்மையின் உறுதி கொண்டவர்.

பகைமை யற்றவர் பழிக ளற்றவர்
உவமை யற்றவர் உலகின் உத்தமர்.

ஏழை யானவர் எளிய மக்களின்
தோழ ராகித்தன் சுகந் துறந்தவர்.

பணித லாற்பிறர் பணிதல் கொண்டவர்
துணிவி னல் ஜெக சோதி யானவர்.

சிறை யடைத்தும்நற் சேவை கொண்டவர்
சுவை யோடைந் ததும் வகை யறிந்தவர்.

மாந்தர் வாழ் நெறி வகுத்த வள்ளுவன்
காந்தி தோன்றலாற் கடமை முற்றினன்.

**தில்லைச்வசின்**

சிவசாமி தில்லையம்பலம்.

**பிறப்பு:** வேலணை, இலங்கை, 5-1-1928.

இவருடைய கனவுக் கன்னி, தாய் என்னும் இரண்டு கவிதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன. நகைச் சுவையைக் கலந்து பாடவல்லவர். 'தமிழன்' என்ற மாசிகையை நடத்தியவர்,

## பூ: நாற்பத்தெட்டு

காந்திஜிக் கின்றுநா ற் றுண்டெனக் கேட்டுளக்
கண்கள் விழித் தெழுந்தேன்
சாந்த நிலாவடிந் தோடிய புன்னகைச்
சால்பில் உளந்தெளிந்தேன்
மாந்தருக் குள்ளொரு மாணிக்க மென்றவர்
மாண்பில் மணந் துணிந்தேன்
தேய்ந்துளம் வாடிய தேசம் பலப்பல
தேடிப் புகழ்பொழிந்தேன்.

நாட்டிற் பிளவுகள் வாட்டிய வேளையில்
நல்வழி நின்றபிதா
தோட்டியோடும் உறவாடி அணைந்தன்பாய்
தோழமை காட்டியதாய்
கூட்டில் அழுந்திய கோகில நாட்டினை
மீட்டுயிர் ஊட்டியசேய்
வாட்டும் வறுமைகள் ஓட்டிச் சிறந்தநல்
வாழ்வாங்கு காட்டிய கோ.

அம்பி

அம்பிகைபாகன் இராமலிங்கம்

**பிறப்பு:** நாவற்குழி, இலங்கை, 19-2-1929.

'கிறீனின் அடிச்சுவடு,' 'அம்பிப் பாடல்' ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளார். உலகத் தமிழ் மாநாட்டிலே நடத்தப்பட்ட கவிதைப் போட்டியிலே பரிசு பெற்ற இலங்கையர்.

## பூ: நாற்பத்தொன்பது

வந்தனையே மானிலத்து மாந்தரெலா
மகிழ்வுடனே வாழ்வதற்கே
தந்தனையே நின்னுன்ம தரிசனத்தை
வெற்றியன்றேல் தரியோமென்றே
வெந்தனையே வெள்ளையரின் நிறவெறியால்
நெறிக்கொவ்வாப் போர்யாகத்தால்
எந்தையே, நீர் எம்மைவிடுத் தெவ்வுலகு
வாழ்வதற்கே யினிதாயேற்றீர்?

காரிருளை நீக்கவந்த கதிரோ னென்றால்
காலமெலாம் காலுதற்குக் கதிரோற் கேலா
தாருயிரை யளிக்கவந்த வமுதமென்றால்
ஆலவிட மாழியிடைப் பிறந்த தன்றோ
மாருதமா யுலகைமகிழ் வித்தா யென்றால்
மாருதத்தின் சண்டமுமக் கில்லை யன்றோ
ஆருயிரே, வமுதமதே, யருளே, யன்பே,
ஆத்துமத்தின் திருவடிவே யகன்ற தெங்கே?

மீரா

*ஸெய்யித் மீரா. பி.*

**பிறப்பு:** *அக்கரைப்பற்று, இலங்கை, 19-10-1929.*

*ஆழ்ந்த இலக்கிய அபிமானமுள்ள இவர் கவிதைகள், கட்டுரைகள் எழுதி வருவதோடு, முஸ்லிம் சிறுவர் நலன் கருதி 'சாந்தி வாசகம்' என்ற பாட நூல் வரிசையை வெளியிட்டுள்ளார்.*

## பூ: ஐம்பது

தாரகமாம் அன்பு நெறித் தத்துவத்தைத்
தாரணிக்குத் தந்த காந்தி!
பாரதத்தில் பிறந்த சுடர் பாரெல்லாம்
பேரொளியாய்ப் படர்ந்து அண்ணல்
கூரறிவால் குவலயத்தார் கூட்டுணர்வில்
கூட்டுறவாய் நிலேத்து நாளும்
சீர்நிறையும் சுதந்திரத்தின் சிறப்பினுக்கு
வழிவகுத்த செம்மல் வாழ்க!

இறைதந்த உலகொளியாய் இன்சொல்லின்
எழிற்றிருவாய் மக்கள்நெஞ்சின்
நிறைதந்த புகழ்மணியாய் நேசத்தின்
பாசறையாய் நெறிகள் கூறும்
மறைதந்த மாண்பணியாய் வையத்தின்
மெய்யுருவாய் வாய்மைவெல்லும்
நிறையேந்தி நினேவேந்தி நிற்குமவர்
புகழோங்கி நீடுவாழ்க!

**சித.பழனிச்சாமி**

பழனிச்சாமி. சித
**பிறப்பு:** சிங்கப்பூர், 21-4-1930.
சிங்கப்பூர் துறைமுக ஆணே நிறுவனத்தில் பணியாற்றும் இவர், தமிழ் இலக்கியத் தொண்டிலும், கவிதை புனே வதிலும் ஆர்வம் மிக்கவர்.

# பூ: ஐம்பத்தொன்று

அன்புக்குச் சமாதி கட்டி யமைதியைச்
சிதையி லேற்றி
வன்புக்கு வாழ்த்துப் பாடி வாழ்ந்தவர்க்
காகக் காந்தி
என்புட்கி யுடல முட்கி எரிந்துமே
சாம்ப ராகி
விண்புக்க நிலையை யெண்ணி விழிகணீர்
சொரியார் யாரே!

**சொக்கன்**

சொக்கலிங்கம். க. வித்துவான்

**பிறப்பு:** யாழ்ப்பாணம், இலங்கை, 2-6-1930.

சிறுகதை, நாவல், நாடகம், கவிதை ஆகிய பல துறைகளிலும் தமது படைப்பாற்றலை வெளிப்படுத்தியுள்ளார். இலங்கைக் கலைக்கழகம் ஆண்டுதோறும் சிறந்த நாடகப் பிரதிக்கு அளித்து வரும் 500 ரூபாய் பரிசினை இரு தடவைகளிலே பெற்றவர். 'சிலம்பு பிறந்தது', 'சிங்கிரிக் காவலன்' போன்ற ஐந்துக்கு மேற்பட்ட நூல்களின் ஆசிரியர்.

## பூ: ஐம்பத்திரண்டு

உண்ணு விரதந் தனேக்கொண்டு உலகறியக்
கொண்டு தொடுத்த விடுதலேப்போர் குவலயமே
நின்று அடிபணியச் செய்திட்ட செம்மலவர்;
கதரும் கதருடையும் 'காந்தீய' மிதுவெனவே

தீண்டாமைப் பேயை விரட்டிநம் மக்களெலாம்
ஒன்ருய் ஒருகுலமாய் ஒற்றுமையாய் வாழவென
அன்புரைத்த அண்ணல்; அடிகள், மகாத்மாதம்
கொள்கை வழிநின்று செயலாற்றி நினேவோமே!

இளம்பரணன்

*ஆறுமுகம். கணபதிப்பிள்ளே சின்னேயா.*

**பிறப்பு:** *யாழ்ப்பாணம், இலங்கை, 25-7-1930.*

*தமது தாயையும், தந்தையையும் மிக இளவயதிலேயே இழந்து, கஷ்டமான சூழ்நிலேயில் வாழ்ந்து சுயமுயற்சி யால் வாழ்க்கைத் தரத்திலும், கவிதைத் துறையிலும் முன் னுக்கு வந்துள்ளார்.*

## பூ: ஐம்பத்து மூன்று

உண்மை, அகிம்சை எனும்புயங்கள் — அவை
ஒன்றிரண்டேந்திய இந்தயுகம்,
தண்மை, பொறுமை எனுமிரு கண்களைத்
தாங்கிய காந்தியம் தந்தயுகம்

குண்டு வெடிக்கின்ற குள்ளர்களும் — எங்கும்
கோணல் விதைக்கின்ற 'வில்லர்'களும்
மண்டுகின் றார்பல குப்பைகள் போல் — எனில்
மாமணிக் காந்தியம் குன்றிமணி!

வல்லர சென்கின்ற வாவலுகள் — இருள்
பார்க்கத் திறந்த விழியினங்கள்
கொல்லொலி கூட்டும் இடங்களிலும் — அண்ணல்
கொள்கையின் சிற்றொலி கேட்கிறது.

**சாலை-இளந்திரையன்**

மகாலிங்கம். சாலை. இராம. M. A., M. Litt.

**பிறப்பு:** சாலைநயினார் பள்ளிவாசல், நெல்லை, தமிழ் நாடு, 6-9-1930.

கவிதைத்துறையிலும், இலக்கிய விமர்சனத்திலும் மிக்க ஈடுபாடு உள்ளவர். பக்கச்சாய்வு இல்லாமல், இலக்கிய விமர்சனத் துறையில் புதிய வழியை வகுத்தவர். பத்துக்கு மேற்பட்ட நூல்களை இவ்விரு துறையிலும் வெளியிட்டுள்ளார். தில்லிப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பேராசிரியர்.

## பூ: ஐம்பத்து நாலு

தந்திகள் அறுந்து தளர்ந்த வீணையில்
பந்தம் எழுந்தது பழுது திருத்துமோர்
விந்தை தெரிந்த வித்தகன் மெல்ல
வந்து தோன்றினன் வீணை நரம்புகள்
அன்பாய் அஹிம்சையாய் அரிய ஒழுக்கமாய்
பண்பாய் பக்திப் பாதையாய்ப் பேதைமை
நீக்கும் நெறியாய் நிறைமதுப் போதை
போக்கும் மருந்தாய் ஒற்றுமை சிதையா
ஒழுங்கில் பொருத்தி
மீட்டினன் பாரத வீணை அதிர்ந்தது
கேட்டது நாதம் உலகம் முழுமையும்
வீணை திருத்தி மீட்டிய வித்தகன்
காண விழைந்த நாதம் உலகம்
பூண நினைத்தல் பொருந்தும் — எவரும்
நானை நீக்கி நாமாய் மாறின்
பேணும் சாந்தி பிறக்கும் — அறுந்த
வீணை திருத்தி மீட்டிய காந்தி
வித்தகன் நூறும் ஆண்டில்
சக்திகள் பெருக நாதம் எழும்புமோ?

**அண்ணல்**

சாலிஹ். முகம்மது சுல்தான் முஹம்மது

**பிறப்பு:** பெரிய கிண்ணியா, இலங்கை, 8-10-1930.

கவிதை, சிறுகதை, இலக்கிய விமர்சனம் ஆகிய இலக்கியத் துறைகளிலே ஈடுபாடுடையவர். 'காதற் பாடல்களுக்கு ஓர் அண்ணல்' என்று மற்றக் கவிஞர்களாலேயே போற்றப்படுபவர். 'அண்ணல் கவிதைகள்' என்ற மகுடத்தில் இவருடைய கவிதைகளுள் ஒரு பகுதி நூலுருப் பெற்றுள்ளது.

## பூ: ஐம்பத்தைந்து

''ஆள்பலமும் தோள்பலமும் ஆட்சித் துரைத்தனத்தின்
சூழ்பலவும் சூழ்ச்சிகளும் தோல்விதரா — நீள்புவியில்
வன்பின் வழிசென்று வாங்கோம் சுதந்திரமே
அன்புவழி யென்றூர்'' அது.

''பாரதமே உன்னைப் பழித்துப் பலர் நகைத்தல்
சீராமோ? செங்கண் சிவக்காதோ — கூரான
வேலின்றி வாளின்றி வெள்ளையரை வெற்றிகொள
ஏலு'' மென்றூர் காந்தி இரும்பு.

**அவைவேந்து**

முகம்மது யூசுப். இஸ்மாயில் லெவ்வை

**பிறப்பு:** ஏருவூர், இலங்கை, 24-10-1931.

நகைச்சுவையும், புதுமையான உவமைகளும் விரவச் சம்பாஷிப்பதில் சமர்த்தர். அவ்வாறே இக்குணங்கள் அவரது கவிதைகளில் மிளிரும்,

## பூ: ஐம்பத்தாறு

காந்தியெனும் பேர்கேட்டால் கருத்தி னிக்கும்
காலமெலாம் அவன்வாழ்வு கருத்தில் நிற்கும்
காந்தியெனும் சாந்தமுகம் கடுமை ஓட்டும்
காலனுமே தயக்கமுறக் கவலை தீர்க்கும்
காந்தியெனும் கதிரொளியில் கயமை மாளும்
காசினியில் அன்புநெறி கனிந்து மீளும்
காந்தியெனும் புனிதஉரு காலந் தோறும்
காட்சிதர நெஞ்சமதில் கருணை பூக்கும்.

அன்பு

அன்பானந்தன். சி.

**பிறப்பு:** பினங்கு, மலேசியா, 28-3-1932.

கட்டுரை—கவிதை ஆகிய இரு துறைகளிலும் ஈடுபாடு கொண்டுழைத்து வருகின்றார். மலாயா எழுத்தாளர் சங்கம் நடாத்திய கட்டுரைப் போட்டியில் முதற் பரிசு பெற்றவர். 'கனிமொழி' என்னும் குறுங்காவியத்தின் ஆசிரியர்.

# பூ: ஐம்பத்தேழு

சத்தியப் பாதை நின்று
சரித்திரம் காண எண்ணி
உத்தம வாழ்க்கை நெய்த
உயர்தனி மாந்தர் தெய்வம்
இத்தரை வாழும் மக்கள்
ஈடில்லா சுதந்திரம் காக்க
பத்தரை மாற்றுத் தங்கம்
போலவே வாழ்ந்த சிங்கம்

**ஜெயம்**

*கோமஸ். அன்டனி பீட்டர் வின்சன்ட்* **B. A. Dip-in-Ed.**

**பிறப்பு:** *கொழும்பு, இலங்கை, 29-6-1932.*

*சிறுகதை - கவிதை - கட்டுரை ஆகிய இலக்கியத் துறைகளிலே ஈடுபட்டுழைக்கும் இவர், மாணுக்கர் மத்தியிலே இலக்கிய விழிப்பினை ஏற்படுத்தவும் உழைத்து வருகின்றார்.*

## பூ: ஐம்பத்தெட்டு

உண்மையே உயர்ந்த நீதி
 உணர்ந்த நல்லன்பே தெய்வம்
கண்ணியம் மிக்க யார்க்கும்
 கவசமாம் அஹிம்சை என்று
திண்ணமாய் உரைத்த எங்கள்
 தூயவர் காந்தி எம்மான்
மண்ணிலே தெய்வங் கண்டோர்
 மகிழ்ந்தவர் வழியிற் செல்வோம்.

எளிமைசேர் தூய வாழ்க்கை
 என்றுமோர் புன் சிரிப்பு
குளிர்ந்திடும் இனிய சொற்கள்
 குறையிலாப் புனித நெஞ்சம்
ஒளியொடும் அருள் சேர்கண்கள்
 ஒன்றினும் பற்றே யில்லாத்
தெளிவுறு ஞானச் செம்மல்
 திகழ்தரு காந்தி எம்மான்.

**நல்லைக்குமரன்**

*முத்துக்குமாரசாமி. பரமசாமிக்குருக்கள், சங்கீத பூஷணம்*
**பிறப்பு:** *நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை, 23-8-1932.*
*சிறுகதை - கவிதை - நாடகம் ஆகிய துறைகளில் ஈடுபாடுடையவர்.*

## பூ: ஐம்பத்தொன்பது

எழிலார்ந்த பேரிமயம் இன்னறுநீர்க்கங்கை
    இந்தியநற் றவநாட்டின்
பொழிலார்ந்த தபோவனங்கள் புண்ணியமாம்
    புனிதநெறி கண்டளித்தோர்
வழியோர்ந்து தெரிந்தளிக்க நம்நாளில்
    வந்துதித்த புதுமுனிவன்
பழிதேர்ந்து விலக்குகின்ற பண்பாளன்
    பாரதத்தின் மார்க்கபந்து

ஒற்றுமைகொள் சமதர்மம் தீண்டாமை
    வொருவுகின்ற பொதுவாழ்வு
கற்றுயர எல்லார்க்கும் கல்விதரும்
    கனிவான பொதுத்தொண்டு
வெற்றிபெறும் புதுவாழ்வு தேசபக்தி
    வீரம் கருணை பாரதத்தில்
முற்றுமுயர் பெருநலங்கள் முழுதும்வர
    மோகனதாஸ் காந்தி வந்தான்.

**நா.பார்த்தசாரதி**

*பார்த்தசாரதி. நா. வித்துவான், பண்டிதர்*

**பிறப்பு:** *நதிக்குடி, இராமநாதபுரம், தமிழ்நாடு, 18-12-1932.*

*'குறிஞ்சி மலர்' 'பாண்டிமாதேவி' ஆகிய நாவல்கள் உட்பட 25ற்கு மேற்பட்ட நூல்களின் ஆசிரியர். 'தீபம்' என்ற தரமான இலக்கிய மாசிகையின் ஆசிரியர்.*

## பூ: அறுபது

உண்ணிடா நோன்பால், பொய்யா
உள்ளத்தால், உண்மைவாக்கால்
எண்ணெணு மக்கள் தங்கள்
இதயத்திலுறைந்த காந்தி
அண்ணலே — அறப்போர் கண்ட
அன்பெனும் வடிவை எண்ணிக்
கண்ணியக்கடமை செய்தே
காந்தியாய் மாறி வாழ்வோம்!

**தாமரைத்தீவான்**

இராஜேந்திரம். கே.

**பிறப்பு:** கிண்ணியா, இலங்கை, 1932.

கிண்ணியா எழுத்தாளர் சங்க கிளைத் தலைவராக இலக்கியப் பணி புரிந்து வருகின்றார்.

## பூ: அறுபத்தொன்று

''அருமையுளத் தெண்ணம்சொல் செயல்களாலே
ஆர்த்தெழும்பும் தீமைகளைக் காத்துவெல்லக்
கருதுபவர்க் குத்தொழுகை, கேடயம்போற்
கைகொடுக்கும், காப்பாற்றும், காண்க''வென்று
பெருகிவரும் துயரமெலாம் பிரார்த்தனையாற்
பெருவெற்றி கொண்டுயர்ந்த காந்தியண்ணல்
பெருமையுறக் கூறியிறை வணக்கத்தாலே,
பெருமையுறும் எனச் சொன்னார் கடைப்பிடிப்பீர்!

**எம்.ஸி.எம்.ஸுபைர்**

*ஸுபைர். முகம்மது காஸிம் லெப்பை முகம்மது*

**பிறப்பு:** *கல்ஹின்ன, கண்டி, இலங்கை, 27-8-1933.*

*மலர்ந்த வாழ்வு (கவிதை), மலரும் மணமும் (பாலர் பாடல்) ஆகிய நூல்களைத் தந்துள்ள இவர், பதிப்பாசிரியராகவும் உரையாசிரியராகவும் தமது தமிழ்ப் பணியை விரிவு படுத்தியுள்ளார்.*

## பூ: அறுபத்திரண்டு

வந்தவர் கொண்ட வாழ்க்கையின் நோக்கைச்
சிந்தையிற் கொண்டார் சிக்கெனப் பிடித்தார்
அஞ்சா நெஞ்ச ரகிம்சா மூர்த்தி
துஞ்சா வீரர் சுதந்திரத் தென்றல்
தூய்மை தாய்மை துன்னரும் நேர்மை
வாய்மை யேந்தி மகாத்மா காந்தி
தன்னல மில்லா நன்னெறி யாளன்
முன்னிருள் நீக்கு மின்னொளி விளக்கு
சாதியை மொழியைச் சமயத்தை வென்றான்
தீதுகள் பாராச் செம்மனச் செல்வன்
ஒன்றே உலக மொருவனே தேவன்
என்றே வாழ்ந்த ஏழைபங் காளன்
என்றே போற்றி யாவரு மேற்ற
நன்றே கொண்ட நோக்கமும் நாட்டி
அன்பு மறிவும் அடக்கமுங் கொண்டே
என்பும் பிறர்க்கா யீந்தறங் காத்துத்
தனியோர் மகனாய்த் தாங்கின னுலகை
இனியோர் மனிதன் எப்பொழு திறைவா?

**வி. கந்தவனம்**

கந்தவனம். விநாயகர் B. A.

**பிறப்பு:** *நுணாவில், சாவகச்சேரி, இலங்கை, 1933.*

*'இலக்கிய உலகம்', 'ஏனிந்தப் பெருமூச்சு?' ஆகிய கவிதை நூல்களின் ஆசிரியர். யாழ் இலக்கிய வட்டத் தலைவர் (68-69); ஈழநாடு, கூட்டுறவு ஆகிய பத்திரிகைகள் நடத்திய கவிதைப் போட்டிகளிலே கலந்து முதற் பரிசு பெற்றவர். பூகோளப் பாட நூல்களும் எழுதியுள்ளார்.*

## பூ: அறுபத்து மூன்று

உத்தமன் காந்தியின்
சொற்றொடர் முற்றுமே
சத்திய சோதனைகள் — சுவை
நித்திய சாதனைகள்.

எஸ்.பி. அமலன்

அமலன். எஸ். பி.

**பிறப்பு:** பெரியவர் சீலி, திருச்சி, தமிழ்நாடு, 30-11-1934.
சிறுவர் இலக்கியம், நாடகம் ஆகிய துறைகளிலும் ஈடு பாடு உடையவர். கவிதையைத் தமது உயிராக நேசிப் பவர். 'டுமீல்' என்னும் சிறுவர் மாத இருமுறை இதழின் ஆசிரியர்.

## பூ: அறுபத்து நாலு

ஒட்டிய வயிறு, உலர்ந்த கன்னங்கள்
சுட்டுப் பொசுக்கும் பசியிலே வெந்த
நெஞ்சுகள் கூவும் பஞ்சக் கூக்குரல்,
கொஞ்சமோ? — கண்கள் கொட்டும் கண்ணீர்,
மனத்தைத் தேய்த்துக் கரைத்துக் குறுக்கி
நினைக்குந் தோறும் நெரிக்கும் கவலைகள்
யாவும் நீங்கித் தூரம் போகவும்,
அன்பு நிலவொளி அகங்களிற் குளிர்மை
தந்தே உலகெலாம் சுந்தரம் பூசிக்
கண்ணிலே இன்பம் காட்டிச் சிரிக்கவும்
பண்ணிலே ஊறிய பாணன் கையின்
யாழ் நரம்பு இசைக்கும் கான வெள்ளம்
செவிகளில் மகிழ்வைச் செறிவித்து ஊட்டவும்
காற்றே தடவிக் கவிதை சாற்றவும் .....
புத்துலகு ஒன்றினுட் போக முயன்றவன்
வித்தகன் காந்தி விபுலன்!
அத்தனின் முறுவலை அகத்து வைப்போமே.

**இ. முருகையன்**

முருகையன். இராமுப்பிள்ளை **B. A., B. Sc.**

**பிறப்பு:** *கல்வயல், சாவகச்சேரி, 23-4-1935.*

*கவிதையில் தமக்கென ஒரு தனிப் பார்வையும், பாணியும் அமைத்துக் கொண்டவர். பாட நூல்கள் எழுதும் பணியில் தமிழ்த் தொண்டியற்றிக் கொண்டிருக்கின்றார்.*

## பூ: அறுபத்தைந்து

'ஐயாவே! தெய்வமே! அண்ணலரே! கோமானே!
மெய்யாக, நாமுன்னை மெத்தப் பணிகின்றோம்;
உன்னாணை! எம்மூச்சாய் உம்வாக்கைக் கொள்கின்றோம்,
என்று பணிந்து நிழல்போலச் சூழ்ந்து,
துணையிருந்தோர் நெஞ்ச உலையிற் சமைந்த
அணுகுண்டு தான்கோட்சே என்றவுண்மை தள்ளாத
இந்தக் கிழமா? அறிந்துகொளும் என்றினிய
சிந்தையிற் கொண்டிருப்பீர்; சோதரீர்! யாரையும்நான்
நோகவிதில் ஒன்றுமிலை; நானென்ன இவ்வுலகில்
சாகா வரம்பெற்று வந்தேனோ? இல்லையில்லை.'
என்றிருப்பார் உள்ளில் எனும்பொருளைப் புன்னகைக்கு
உன்னும் கவிதை உளம்.

மருதூர்க் கொத்தன்

இஸ்மாயில். வாப்பு மரைக்கார் முஹம்மது

**பிறப்பு:** மருதமுனை, கல்முனை, இலங்கை, 26-6-1935.
சிறுகதைத் துறையில் வெற்றியீட்டியுள்ள எழுத்தாளர், கல்முனை எழுத்தாளர் சங்கத்தின் ஸ்தாபக செயலாளரான இவர், இப்பொழுது அதன் தலைவராகப் பணிபுரிகின்றார்.

# பூ: அறுபத்தாறு

அன்புக்கு இலக்கணமாய் வாழ்ந்து, வாழ்வில்
அக்கிரமம் சிரம்பணிய அஹிம்சை காத்துப்
பண்புக்கு வரம்பமைத்துப் பாரைக் காத்துப்
பாவத்தைத் தூண்டுகின்ற பணிகள் கொன்று,
என்புருகத் தன்னுணர்வைத் தீட்டி வென்று
இந்தியாவின் நாமத்தை உலகம் என்றும்
கண்முன்னே நிறுத்துதற்கு மார்க்கம் கண்ட
காந்திமகான் மனிதகுலப் புனிதரன்றோ!

போதிமரப் புத்தரது நிழலில் நின்று
புனிதஉரு யேசுபதம் போற்றி ஏற்றி
நீதி நெறி காத்துயர்ந்த நபிகள்நாதர்
நேர்மைமிகு சாதனைகள் அனைத்தும்பேணி
பீதியுற்ற பேதைகளுக் குணர்வு மூட்டி,
பிறப்புரிமை பேணுகின்ற வழிகள் காட்டி
தீதகற்றி வெற்றிகண்ட தூயகாந்தி
தேசுமிகும் மனிதகுலப் புனிதரன்றோ!

**யுவன்**

அப்துல் கபூர். மீரா லெப்பை

**பிறப்பு:** பொத்துவில், இலங்கை, 25-8-1935.

நாட்டின் நானு பகுதிகளிலும் நடைபெற்ற பல கவிதைப் போட்டிகளிலே பங்குபற்றிப் பரிசில்கள் பெற்றுள்ளார். வானொலிக்கான கவிதை நாடகங்கள் எழுதுவதிலும் மிக்க ஈடுபாடுடையவர்.

# பூ: அறுபத்தேழு

இனிய சுவைதான் இளநீர் பருக எனினும் என்?
மனித உடலை வருத்திச் சிறிதும் வளர்க்காத
சனியன் பிறரின் இளநீர் தொடுதல் சரியாகா
இனிமை பெறுவா ஞெருவன் அவனே எனதன்பன்.

சுளைகள் இனிதே பலாவின் கனியைத் தொடுதற்கு
அழையா மரமும்; அதனு லறிவில் அணிலா நீ?
உழையா மனிதன் ஒருநாள் சிறிதும் ஊற்ருமல்
விழைதல் இழிவே! விடுக அதுவோர் விழல்வேலை.

மலர்கள் அழகே; இறைவன் மனதை மகிழ்விக்க
பலரும் பிறரின் மனையில் தினமும் பறிப்பானேன்?
சிலகன் றுனது வளவில் நடுதல் முடியாதேல்
அலரும் முன்னே அயலிற் கொய்தல் அறிவாமோ?

உறவோ ரெனினும், ஒருநா ளுணவை உழையாமல்
பெறவே முயலும் பெருநோ யழிக பிழைசெய்து
பிறரின் சுகமுன் மனதில் உளைவைப் பிறப்பித்தால்
அறவே யுனது இருகை அறுக அதனு லென்?

**பாண்டியூரன்**

கணபதிப்பிள்ளை. குமாரசாமி

**பிறப்பு:** பாண்டிருப்பு, கல்முனை, இலங்கை, 12-9-1935.
'நபிமொழி நாற்ப'தின் ஆசிரியர் ஆ. மு. ஷரீபுத்தீனை ஆதர்ச குருவாகக் கொண்டு, கவிதைத் துறையில் வேக மாக வளரும் இளங்கவிஞராவர்.

## பூ: அறுபத்தெட்டு

சந்தியொளி மேற்குவான் முகட்டினிலே
வீசியெழக் கிழக்கு வானிற்
பக்தியுடன் சாந்தியொளி பரப்பிநின்ற
பரஞ்சோதி காந்தியண்ணல்
திக்கெட்டுஞ் செயலொளியாற் றீமையிருள்
அகற்றிவிட்ட சேவைகொண்டால்
எக்காலும் எமதிடையில் இருளுறுமோ?
இடருறுமோ? இல்லை. இல்லை.

சத்தியத்தின் தனியுருவாய் தன்னலனுக்
கோர்விஷமாய்ச் சாத்துவீகப்
புத்தம்புது போராட்டம் புவிநிலைக்கப்
புந்திதனில் அருளைப்பூண்டு
இத்தரையில் இழிவுநிலை எரியுறவே
எம்நிலையை எடுத்துக் காட்டத்
தத்துவத்தின் ஒளிப்பிழம்பாய்த் தான்வந்தார்
காந்திமகான் தரணிமீது.

**மருதமைந்தன்**

*சாகுல் ஹமீத். முஹம்மது சரீப்*

**பிறப்பு:** *காத்தான்குடி, இலங்கை, 21-2-1936.*

*கவிதை - கட்டுரை – உருவகக் கதை ஆகியன புனைவதில் ஈடுபாடுடையவர். 'அமுது' என்னுங் கவிதை நூலையும் வெளியிட்டுள்ளார்.*

# பூ: அறுபத்தொன்பது

வான்வெளி தன்னில் நின்று - நீல
விண்முகிலை ஒதுக்கி

மோனச் சிரிப் புதிர்க்கும் - ஓ
மோகனதாஸ் நிலவே

தேனமு தையொத்திடும் - நின்
தென்றல் சிரிப்பினைப் போல்

ஏனோஉன் நாட்ட வர்க்கு - நகை
எய்திடக் கூடவில்லை

அன்பே பாதை என்றாய் - இவர்
அதனைத்தொடர்வம் என்றார்

வன்பே வேண்டாம் என்றாய் - இன்று
வார்த்தை மறந்து விட்டார்

போக்கில் பொறுப்பு பண்பு - செழிக்க
புன்னகை காட்டு அண்ணல்!

**வெ.நல்லதம்பி**

*நல்லதம்பி. வெ.* **B. A.,** *வித்துவான்*
**பிறப்பு:** *செட்டியபட்டி, திருச்சி, தமிழ் நாடு, 1-6-1936.*
*'அழகு நிலா' என்ற நூலின் ஆசிரியர், திருச்சி வானொலி நிலையத்தில் நிகழ்ச்சி அறிவிப்பாளராகப் பணிபுரிகின்றார்.*

## பூ: எழுபது

கீதைவழி ஏசுக்கிறித்துவழி — நாயகனார்
ஓதுவழி புத்தர் உரைத்தவழி — பேதமுண்டோ?
தூயவனாம் காந்தி! நீ சொன்ன அஹிம்சை வழி
வையகம் போற்றும் வழி.

கங்குலிடை வாழுகின்றார் கண்டாயோ! வீசியொளி
இங்குள்ளோர் உள்ளத் திருளகற்ற — எங்களிடை
மீண்டும் பிறவாயோ! மேதினியே சாந்திபெற
வீணர் இடும்பை விழ.

மதகுபட்டி கிட்டு

கிருஷ்ணன். SP. S.

**பிறப்பு:** மதகுபட்டி, சிவகங்கை, தமிழ்நாடு, *14-11-1936*.

கவிதை — சிறுகதை ஆகிய துறைகளில் ஈடுபாடு கொண்டு உழைப்பவர். 'தென்றல்' நடத்திய வெண்பாப் போட்டிகளிலே பங்குபற்றிச் சில தடவைகள் பரிசும் பெற்றிருக்கின்றார்.

## பூ: எழுபத்தொன்று

எண்ணத்தின் தூய்மை
இதயத்தில் வாழ்தலறம்
கண்ணியத்தை நீக்கும்
கசடு அகலுவதால்
வாழ்வு பசுஞ்சோலை
வான்மழையின் செல்வநலம்
சூழ்ந்து அழகுசெயுந்
திருக்காட்சி நெஞ்சாக
வாழும் நிலையினிலே
காந்தி விதைதூவின்
நீளும் நமக்கும் புகழ்.

ஹஸன் மௌலானா

*ஹஸன் மௌலானா.* **S. A. S.**

**பிறப்பு:** *மருதமுனை, கல்முனை, இலங்கை, 1936.*

*நல்ல இலக்கிய ரசிகர்; கவிஞர்; எழுத்தாளர்; தமிழ்த் தொண்டர். 'இஸ்லாமிய தமிழ் இலக்கியச் சொற் பொழிவுகள்' என்ற நூலின் தொகுப்பாசிரியர்.*

## பூ: எழுபத்திரண்டு

அறம் அன்பு சேவை அகிம்சை இவையனைத்தும்
உரமுறவே கொண்டுழைத்த
கோமான் — மறம்கடிந்து
மானிடர்தம் வாழ்வு மலர் வுறவே தன்னுயிரை
தானமாய் ஈந்த மகான்.

வி.த.குமாரசாமி

*குமாரசாமி. விஞசித்தம்பி தம்பிமுத்து*

**பிறப்பு:** *மட்டக்களப்பு, இலங்கை, 27-3-1937.*

*மட்டக்களப்பு வீரமாமுனிவர் முத்தமிழ் மன்றத்தின் தலைவராக அமர்ந்து தமிழ்ப்பணி புரிந்து வருகின்றார்.*

## பூ: எழுபத்து மூன்று

சாந்தம் அகிம்சைநற்
சமத்துவக் கொள்கைகள்

தாங்கிச் சேவைகள் ஆற்றினுர் - மானிடம்
ஓங்க நெறியொளி ஏற்றினுர்

போரின் வெறிகொண்ட
பொல்லா வுலகினில்

சீரன்பைத் தரும்வழி காட்டினுர் - சமாதானம்
பாரினிற் பரவவிதி யூட்டினுர்.

யூ.எல். தாவூத்

தாவூத். யூ. எல். **B. A.**

**பிறப்பு:** ஏருவூர், இலங்கை, 6-5-1937.

கவிதை, கட்டுரை, வானெலிப் பேச்சு ஆகியவற்றில் ஈடுபாடுடைய இவர் 'முஸ்லிம் கதைமலர்' என்னும் நூலைத் தொகுத்துத் தந்துள்ளதுடன், 'மாநபி' என்னும் நூலையும் தமிழ் செய்துள்ளார்.

## பூ: எழுபத்து நாலு

அன்பென்னும் கவிமகனின் செஞ்சொற் பாட்டாம்
அறமென்னும் தாயீன்ற அருமைச் சேயாம்
பண்பென்னும் மலர்ச்சோலை தந்த பூவாம்
பரிவென்னும் முகில்தந்த வான மிழ்தாம்
மண்ணுக்குப் புகழ்சேர்க்க வந்த காந்தி!
மனுக்குலத்தின் உளத்திலெலாம் கனிவை யேற்றப்
பண்மிழற்றும் புலவரென வாழ்ந்தார்! வையம்
பாழிருட்டில் மூழ்கிடுமுன் ஒளியாய் வந்தார்!

அலைமோதும் மனிதமனம் அமைதி கொள்ள
அன்பான காந்தியமே மருந்தாம்! மண்ணில்
கொலைக்கருவி குவிக்குமறி வியலால் மக்கள்
குலமுயர காந்தியமே வழியைக் காட்டும்!
பிழைக்கஅவர் ஏட்டிலெதும் எழுத வில்லை!
பிழையறியா அறவோரின் நெறிகள் யாவும்
குழைந்தவொரு பேருருவாய்த் திகழ்ந்தார்!வாழ்ந்தார்!
குவலயத்தை அவர்வழியில் நடத்து வோமே!

**முரசு-நெடுமாறன்**

முரசு நெடுமாறன்

**பிறப்பு:** கேரித்தீவு, மலேசியா, *1937.*

''பொன்னி'' மாசிகையின் துணை ஆசிரியராகப் பணியாற்று வதுடன் 'இளந்தளிர்' என்னுந் தலைப்பில் சிறுவர் பாடல் களையும் நூலாக்கி வருகின்றார்.

## பூ: எழுபத்தைந்து

சிறுமையுறும் இனமாகப் பாரதத்தோர்
    சீரழிந்த நிலைகண்ட செம்மல் அன்னார்
வறுமைநிலை யடிமைநிலை மாற்றுதற்கு
    வழிகாணத் தமதுடலை வாழ்வை யெல்லாம்
அரிதாகப் பேணுது அர்ப்ப ணித்து
    ஆத்மீகச் சுடரேற்றி அகில மெல்லாம்
பெரிதாக விளங்கிட்டா னென்றால் அந்தப்
    பேரொளியின் பெயர்காந்தி - பெருமான் காந்தி!

உண்டான சுதந்திரத்தை உவந்து பெற்று
    உவகையுறும் பொழுதின்முன் உயிரை யுண்ட
சண்டாளன்; அவனுக்கே கருணை கூர்ந்த
    சாத்வீகச் செம்மலது தத்து வத்தை
கொண்டாடல் வாய்ப்பேச்சி லல்ல; வாழ்வில்
    வாய்மையினை; அகிம்சையினை, மக்கட் காற்றும்
தொண்டதனைச் செயலாக்க வேண்டும்; உள்ளத்
    தூய்மையெலாம் காந்திமகான் தொடர்ந்து வாழ்க!

**திமிலைத்துமிலன்**

கிருஷ்ணபிள்ளை. எஸ். **B. A.**

**பிறப்பு:** *திமிலதீவு, மட்டக்களப்பு, இலங்கை, 1937.*

*சிறுகதை, கவிதை ஆகிய இலக்கியத் துறையில் ஈடு பாடுள்ளது போலவே, ஓவியக் கலைஞராகவும் விளங்கு கின்றார். 'நீரரமகளிர்', 'கொய்யாக் கனி' ஆகிய கவிதை நூல்களைத் தந்துள்ளார்,*

## பூ: எழுபத்தாறு

காந்தியென்று பேரெழுதி
காற்புள்ளி வைத்தேன்
கருணையென்று தொடர்ந்தெழுதி
அரைப்புள்ளி யிட்டேன்
சாந்தியென்ற சொல்லொடுமுக்
கால்புள்ளி வைத்தேன்
தத்துவமே முற்றியதென்
ற்றொருபுள்ளி யிட்டேன்.

அன்புக்கும் பண்புக்கும்
அடையாள மாகும்
அரையாடை முழங்காலில்
கேள்விவடி வாகும்(?)
புன்னகையில் இன்னலெலாம்
புறமொதுக்கும் செவ்வாய்
பூத்திருக்கப் பார்த்தவிழி
வியப்புவடி வாகும்(!)-

**ஐ. உலகநாதன்**

*உலகநாதன். ஐ*

**பிறப்பு:** *சிரம்பான், மலேசியா, 3-9-1937.*

*இவர் தொகுத்த 'சந்தனக் கிண்ணம்' என்னும் நூல் பாரி நிலைய வெளியீடாக வெளிவந்துள்ளது. 'மாதவி' என்ற இலக்கிய ஏட்டினையும் நடத்தியவர்.*

# பூ: எழுபத்தேழு

முப்பதுகோடி முகங்கள் மலர்ந்தன;
முக்கோண பாரதம் திக்கெலாம் ஒளிக்கதிர்
மூட்டி எதிரெதிர் பொருத்திப் பாய்ச்சிட
மூலமத்திமம் மூப்புடைப் பக்கிரிக் கோலமாய்
அத்தனை பக்கமும் அதிருறக் கிளர்ந்ததை
அகிலம் கண்டது. ஆட்சியை எதிர்த்திடும்
அசகாய சூரர்கள், அழிவினை ஆக்கிடும்
ஆயுதம், அணு, ஆண்மை, கர்வம்
அத்தனை கொட்டமும்
அடியினில் வீழ்ந்தன!

அஹிம்சை! சாத்வீகம் சார்ந்ததோர் போரினை
உலகம் ஏற்றது; ஏற்கவும் வைத்தனர்;
திசையெலாம் அரசியல் தீரர்கள் இம்முறைத்
திறமையைப் பற்றினர்.
விசைகொடுத்து, வீங்கி இப்போரிலும்
அசைந்துழன்றனர்; அசலையே பூசினேர்!

காந்தி மஹாத்மாவின் கண்ணெளிர்ச் சுடரிலே
நீந்தி மனதை ஆர்த்த வெழுச்சிகள்
ஊர்ந்தன! அதனல் ஊரும் உலகமும்
ஒன்றுதல் காணவே எதிரிகள் நடுங்கினர்!
உலக மஹாத்மா சாத்வீகத் தந்தையுமாஞர்!

ஏ. இக்பால்

இக்பால். ஆதம்லெவ்வை
**பிறப்பு:** அக்கரைப்பற்று, இலங்கை, 11-2-1938.
நாடகம் தவிர்ந்த ஏனைய இலக்கியத் துறைகளிலே ஈடு
பாடு கொண்டு பணியாற்றி வருகின்றூர்.

## பூ: எழுபத்தெட்டு

அப்பருழ வாரப் படையேபோல்
எப்பொழுதும் கைராட்டை ஏற்றவராய் - ஒப்பற்றே
இந்தியர்கள் தம்கையைத் தாம்நம்பும் எண்ணத்தைத்
தந்துயர்ந்தார் தந்தை யவர்!

உள்ளத்தே ஊறுகிற உண்மையெனும் தேனமுதம்
தள்ளரிய ஆணை தரணியிலே! - கொள்கையதை
வாழ்வினிலே கொண்டு வழுவாமல் ஆய்வதிலே
மூழ்கினரே காந்தி முனைந்து!

மனசை ப.கீரன்

*மனசை. ப. கீரன்.* **B. A., B. T.**

**பிறப்பு:** *மனசை, தமிழ்நாடு, 24-4-1938.*

*சென்னை வானொலி நிலையத்தில் எழுத்தாளராகப் பணி புரியும் இவர், காற்றிலே மிதந்த கவிதைகள், கடை திறக்கலாம், மணமாலை ஆகிய கவிதை நூல்களை வெளி யிட்டுள்ளார்.*

## பூ: எழுபத்தொன்பது

வெள்ளையரின் ஆட்சியிலே அடிமைப் பட்டு
வீழ்ச்சியுற்ற பாரதத்தாய் விலங்கொ டிக்க
உள்ளமுவந் துடலாவி பொருளை யீந்த
உத்தமனார் காந்திநெறி பரவு மாயின்
கொள்ளைகொலை பேராசை குடிப்ப ழக்கம்
குறுகுமனப் பான்மையெலாம் அழிந்தொ ழிந்து
வெள்ளமெனச் சாந்தியொளி வைய மெங்கும்
மேலோங்கி வீசுமிதில் ஐய மில்லை.

அன்பாலே அறிவாலே அகிம்சை யாலே
அசையாத தாய்நாட்டுப் பற்றி னாலே
பண்பாலே பயனுள்ள செய்கை யாலே
பற்றற்ற தெய்வீகத் தொண்டி னாலே
உண்ணாமை நோன்பாலே உறுதி யாலே
உயர்வுதாழ் வில்லாத வாழ்க்கை யாலே
அன்னியரை வெளியேற்றி வெற்றி கண்ட
அண்ணலுக்கெம் அஞ்சலியைச் செலுத்து வோமே.

**காரை செ.சுந்தரம்பிள்ளை**

சுந்தரம்பிள்ளை. செல்லையா, **B. A.**

**பிறப்பு:** காரைநகர், இலங்கை, 20-5-38.

'தேனாறு' என்ற கவிதை நூலை வெளியிட்டு, ஸ்ரீ லங்கா சாகித்திய மண்டலப் பரிசு பெற்றவர். ஈழநாடு நடத்திய காவியப் போட்டியில் 'சங்கிலியம்' என்ற இவரது காவியம் முதற் பரிசு பெற்றது.

## பூ: எண்பது

இன்பத்தில் நாட்டம் இலாமல் உலகத்தோர்
துன்பத்தைப் போக்கத் துடித்த கனிவுள்ளம்
சாதிப்பேய் தன்னைச் சமாதியில் வைப்பதற்கு
வேதனைநூ றேனும் விரும்பும் திடநெஞ்சம்
துப்பாக்கிக் குண்டின் துணைகொண்டே இவ்வுலகை
எப்படியும் ஆழ்வோம்எனுமெண்ணம் கொண்டவர்முன்
சத்தியப்போ ராட்டம் தனைவைத்தே அன்னவரைப்
பித்தடையச் செய்து பெருவெற்றி கொண்டதிறன்
எத்தொழிலும் தாழ்ந்த திலைநெஞ்சில் மாறுத
சுத்தியதே வேண்டும் துணைக்குப் பயன்விரும்பும்
எண்ணமும் அற்றுல் இகமே பரமென்று
கண்ணனின் கீதைவழி காலமெலாம் நின்றகுணம்
முற்றும் துறந்த முனிவன் எனவிருந்தும்
மற்றவரை விட்டு வனஞ்சென்று வாழாமல்
மாந்தருடன் வாழ்ந்து வழிகாட்டித் தன்னுயிரும்
ஈந்தே எமைவிட்(டு) இறையாகிப் போனநெறி
இத்தனையும் கண்டே இதயம் நெகிழவெனின்
சத்தியத்தை நேரிற் தரிசிக்க வேண்டுமெனின்
சாந்திவழி நின்று தவறுமற் கற்றிடுவீர்
காந்தி அடிகள் கதை.

**சி. கனகசூரியம்**

*கனகசூரியம். சின்னத்தம்பி*

**பிறப்பு:** *குறுமண்வெளி, இலங்கை, 1-8-1938.*

*பாரதியார் பற்றிய கவிதைப் போட்டியிலே முதற் பரிசான தங்கப் பதக்கம் பெற்றவர்.*

## பூ: எண்பத்தொன்று

நித்தம் பிறக்கும் நத்தைகளில் - ஒரு
முத்துப் பிறந்தது போலவந்தே!
சத்தியம் பேசியே சுதந்திரத்தை - வெற்றிப்
பெற்றுக் கொடுத்தவர் காந்தியம்மா!

சத்திய சோதனை, சான்றாண்மை - மக்கள்
சரித்திரம் மாற்றிய தாய்தந்தை!
நித்திய மானவர், அகிம்சைவயல் - அன்புச்
சொத்து; அகிலத் திருவிளக்கு!

**கோவலன்**

*சுப்பிரமணியம். சாமிநாதன்*

**பிறப்பு:** *சிலாங்கூர், மலேசியா, 5-2-1939.*

*சிறுகதை - கவிதை - நாடகங்கள் ஆகிய துறைகளில் ஈடுபாடுள்ளவர். மலேசியத் தமிழ் இளைஞர் மணி மன்றப் பேரவையின் தலைவர்.*

## பூ: எண்பத்திரண்டு

இருபதாம் நூற்றுண்டின் இருள்வேய்ந்த சாமம்:
விளக்கை நாடும் எஃகு விட்டிலாய்
கருக்கிருட்டில் பாயும் வெடிகுண்டு விமானம்;
இளவேனில் முற்றிலும் விஷப்புகை; உலகெங்கும்
தளபதித் தலைகள் கபாலமாய் உருளும்
ஊழி; தனக்கென றிங்கே தவித்தால்
பீதி; தான்விலகித் தனித்தால்? நிகழும்,

இதயத்தின் கள்ள ரசவாதம்!
காந்தி!
இருபதாம் நூற்றுண்டு இருட்டினுள் ளேயே!

**தர்மு சிவராம்**

*தர்முலிங்கம் அரூப் ஸ்ரீ சிவராம்*

**பிறப்பு:** திருக்கோணமலை, இலங்கை, 20-4-1939.

'மௌனி'யின் சிறுகதைத் தொகுதிக்கு முன்னுரை எழுதி யுள்ளார். இலக்கிய விமர்சனத்திலும், புதுக்கவிதையிலும் ஈடுபாடுடைய இவர் ஓவியம், சிற்பம், ரேகை சாத்திரம் ஆகியவற்றிலும் வல்லமை பெற்றுள்ளர்.

## பூ: எண்பத்து மூன்று

**எ**வ்வுயிர்க்கும் தீங்கிழையா ஏற்றமுயர் ஞானியவர்
செவ்வியநன் நேர்மையிலே
சீர்கொண்டார் — இவ்வுலகில்
ஓங்குபுகழ் நாடியவர், உத்தமராய் வாழ்ந்துயர்ந்தார்
ஓங்காரக் காந்திநிறை வோடு.

சாந்த சொரூபியராம் சன்மார்க்கம் போற்றிநிதம்
காந்தப் புகழ்கொண்ட காவலராம், — காந்திமகான்
ஊருணர்ந்த உத்தமராம் உண்மைத் திருமகனுர்
பேருயர் வாழ்வதுவே பீடு.

**பசுங்குடையார்**

*பழனிவேலு. பெரியசாமி*

**பிறப்பு:** *பசுமலை, சிலாங்கூர், மலேசியா, 24-4-1939.*

**கட்டுரை, கவிதை,** *நாடகம் ஆகிய முத்துறையிலும் ஈடுபாடுடையவர். பேச்சுப் போட்டிகள் பலவற்றில் பரிசு பெற்றுள்ளார்.*

## பூ: எண்பத்து நாலு

சத்திய மூர்த்தி காந்தி மகானின்
சீல ஒழுக்கத்தைப் பார் — அதை
ஞாலம் புகழ்வதைப் பார்,
எத்தவம் செய்து உத்தம காந்தியை,
ஈன்றதோ பாரத நாடு — உலகில்
இல்லை அவனுக்கு ஈடு.

இன்புற்று யாவரும் வாழ்வதற் கென்று
அன்பு வழி வகுத்தான் — காந்தி
அஹிம்சை வழி நடந்தான்,
துன்பந் துடைத்திட கண்ணயராமல்,
தனித்துப் போர் புரிந்தான் — காந்தி
இன்சொற் போர் புரிந்தான்.

**சாரணாகையூம்**

நூர் சாலின் அப்துல் கையூம்

**பிறப்பு:** பதுளை, இலங்கை, 23-5-1939.

சிறுகதை–கவிதை ஆகிய துறைகளிலே ஈடுபாடு உடையவர். ஹதீஸ், நபிகள் நாயகம், குழந்தை இலக்கியம் ஆகிய சிறு நூல்களை வெளியிட்டுள்ளார்.

## பூ: எண்பத்தைந்து

ஒருவர் பிறந்தார்; உலகத்து விஞ்ஞானப்
போக்கிலொரு மாற்றம் புரிய விழைந்தார்போல்!

அன்பு, பொறுமை அவருக்குக் கைகொடுத்த
இன்கருவிக் கூட்டம் - இவற்றின் உதவியுடன்
ஓயாது உழைத்தார்; எதற்குள்ளும் ஊடுருவித்
தாயாக நிற்கும் தனிப்பொருளைச் சத்தியத்தைக்
கண்டெடுத்தார், இந்தக் கலியுகத்தில் பாவித்தார்!
மண்டியிட்டு வையம் வணங்கிற்று; அம்பலத்தைக்
கொண்டுலகின் சர்வ விடுதலைக்கும் கால்வைத்தார்!
ஓர்யுகமே தோன்றிற்று; உண்மையினைச் சோதித்த
அண்மைச் சிறுகாலத் தறிவியலார் கூட்டத்துள்
இந்தமா விஞ்ஞானிக் கிடம்.

**மு. பொன்னம்பலம்**

பொன்னம்பலம். முருகேசுபிள்ளை
**பிறப்பு:** *புங்குடுதீவு, இலங்கை, 26-8-1939.*
*புதிய பார்வையுடன் கவிதைத் துறைக்குள் புகுந்துள்ள இவர், மிகக் குறுகிய காலத்தில் 'அது' என்ற கவிதைத் தொகுதியை வெளியிட்டுள்ளார்.*

## பூ: எண்பத்தாறு

புத்தனையும் யேசுவையும் முகம்மதென்னும்
புனிதனையும் கண்ணனையும் நினைவு கூர ...
வைத்தசம ரசவாழ்வு வாழ்ந்ததெய்வம்;
வையகத்தில் காந்திக்கு நிகர்யாருண்டு?

தத்துவத்தில் வாய்மைதனில் பற்று வைத்து
தன்னைத்தான் திருத்தியதால் முதன்மைபெற்று
இத்தரையில் வாழ்வாங்கு வாழ்ந்து காட்டி
இறவாத புகழ்படைத்த இனியதெய்வம்.

**திமிலைக் கண்ணன்**

ஏரம்பமூர்த்தி. சின்னையா

**பிறப்பு:** திமிலதீவு, மட்டக்களப்பு, இலங்கை,
20-12-1939.

கடந்த பதினொரு ஆண்டு காலமாக, தமது தமையன் திமிலைத் துமிலனை அடியொற்றிக் கவிதைப் பணி புரிந்து வருகின்றார்.

## பூ: எண்பத்தேழு

காந்தியே! எங்கள் நெஞ்சில் கரந்துறை
கின்ற கோவே!
சாந்தியே! மனித வாழ்வில் சாதனை புரிந்த ஏறே!
மாந்தருள் புனிதனே! இம் மாநிலம் உய்ய வந்த
வேந்தனே! ஆசியாவின் விலையில்லா அழகு முத்தே!

அன்புநல் அறமுமிந்த அகிலத்தில் நிலைத்தே ஓங்க
துன்பங்கள் பலதை யேற்ற தொண்டனே!
மக்கள் சேவை
ஒன்றையே தனது மூச்சாய் உழைத்தவா
உன்னைப் போல
என்றுமே ஒரு மனிதர் இனிப் பிறப்பாரா? இல்லை.

**அன்பு முகையதீன்**

முகைதீன்பிச்சை. மு. இ.

**பிறப்பு:** கல்முனை, இலங்கை, 20-3-1940.

ஒன்பது ஆண்டுகளாகக் கவிதைத் துறையில் ஈடுபட்டு வரும் இவர், ஜாயா நினைவு பேச்சுப் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்றவர்.

## பூ: எண்பத்தெட்டு

காந்தியின் இதயந்தன்னைக்
கனவிலும் உணராப்புல்லர்
காந்திய வாதியென்று
கரந்துயர் கனவானாகி
வேண்டிய நெறிகணீத்த
வெறுஞ்சதைச் சடலந்தாங்கி
வீம்புகள் செய்தேதீமை
விளைத்திடல் ஒழிந்துபோகக்

காந்திநூற் றுண்டின்பேரால்
கட்டிடும் கவிதையெல்லாம்
காந்தியக் கொலைஞர்நெஞ்சில்
குண்டுக ளாகிப் பாய்ந்தால்
வீழ்ந்திடும் வேண்டாப் பண்பு
விளங்கிடும் தூயபாதை
சாந்தியும் நிலவ நாட்டில்
சத்தியம் நிலைக்குந்தானே.

**இ.சிவானந்தன்**

சிவானந்தன். இராமுப்பிள்ளை **B.Sc.**

**பிறப்பு:** கல்வயல், சாவகச்சேரி, இலங்கை, 29-6-1941.

நாடகம், கவிதை ஆகிய துறைகளில் நடைமுறை அனுபவமுண்டு. 'கண்டறியாதது' என்ற கவியாரம் ஒன்றினை வெளியிட்டுள்ளார்.

# பூ: எண்பத்தொன்பது

சத்தியம் உற்ற சமத்துவம் என்றும்
தழைக்க உழைத்தவர் காந்தி
நித்தியம் அன்பு நிறைத்துறு தொண்டு
நிகழ்த்தி மிகுத்தவர் காந்தி
பத்திய மற்ற வைத்தியம் கற்ற
பலர்க்கு மருத்துவர் காந்தி
கத்தியி லாது களத்தினில் வென்று
கருத்தில் பெருத்தவர் காந்தி

இன்று முளைத்தது நாளை நிலத்திடை
இற்று விழுந்திடல் உண்மை
என்று நினைத்தரு நன்மை விளைத்திடல்
இன்றி நலிந்தவர் தம்மை
அன்று முனைப்புடன் ஆர்வம் கிளைத்தெழ
தொண்டு நடத்தினர் காந்தி
என்று மனத்தினில் எண்ணும் கணத்தினில்
இன்றும் நிறைந்தது சாந்தி!

**காரைக்கிழார்**

கருப்பையா. முத்துராமலிங்கம்பிள்ளை
**பிறப்பு:** பினாங்கு, மலேசியா, 12-10-1941.
கடந்த பதினொரு ஆண்டுகளாகக் கவிதை இயற்றும் பணியில் ஈடுபாடுடன் உழைத்து வருகின்றார்.

## பூ: தொண்ணூறு

காந்தியென்னும் பெயரினிலே ஒரு காவியம் — வருங்
காலத்தை வென்றிருக்கும் நறுங்காவியம்!
சாந்தியென்னும் பொருளடக்கம் ஒரு
பாதியாம் — அதில்
சத்தியத்தின் முத்திரையே மறு பாதியாம்!

தந்நலத்தைப் பிறர்நலத்தில் பதியவைக்கும் — ஒரு
தத்துவத்தை முடிவுரையே தெளியவைக்கும்!
வரலாற்று விளக்கங்கள் எங்கும்காண்போம் — ஒரு
வரலாற்றின் உருவத்தை இங்கே காண்போம்!

ஐ. இளவழகு

ஆறுமுகம், ஐ.
**பிறப்பு:** சிரம்பான், மலேசியா, 20-11-1941.
சிறுகதை-கவிதை ஆகிய துறைகளில் ஈடுபாடு கொண்டு
ழைத்து வரும் இவர், எழுத்துத் துறையில் ஐந்து தங்கப்
பதக்கங்கள் பெற்றுள்ளார்.

## பூ: தொண்ணூற்றொன்று

மறப்போரால் அன்பறங்கள் மாளும்நிலை எண்ணி
அறப்போரால் மண்ணுரிமை
ஆய்ந்தான் — திறப்போரால்
கொல்லாமை கொண்டவனும் கொண்ட ஒருமையன்பு
வெல்லாமைக் கேதே வினை?

தாழ்த்தப்பட் டோரும் தலைநிமிர்ந்தே தொண்டாற்றி
வாழ்த்தப்பட் டோராய் வயங்கிட்டார் — ஆழ்த்த
பொதுநலத்தால் தன்னலத்தைப் போக்கினர் ஞாலம்
இதுநல ந்தான் என்றேற்ற வே!

**முல்லைவாணன்**

கலியபெருமாள், வே

**பிறப்பு:** சிங்கப்பூர், 30-7-1942.

கதை—கட்டுரை—சிறுகதை ஆகிய முத்துறையிலும் ஈடுபாடு உடையவர்.

## பூ: தொண்ணூற்றிரண்டு

வையக அடிமை ஆட்சி
வாய்மையால் நசிந்து போக
தையலார் கற்பு பேண
தரித்திரம் மறித்தும் ஏக
பொய்பகை மடமை மாய
போதையாம் மதுவு மோய
பொய்கையாய் தேசம் மாற
போதமே ஈந்தார் காந்தி.

**மொயீன் ஸமீன்**

அப்துல் சமீம். முகம்மது மொயீன்

**பிறப்பு:** *பாணந்துறை, இலங்கை, 30-10-1943.*

*ஆழ்ந்த இலக்கிய அபிமானமுள்ள இளைஞர். சிறுகதைத் துறையில் நன்கு அறிமுகமாகியுள்ள இவர், கவிதைத் துறையிலும் ஈடுபாடுடையவர்.*

# பூ: தொண்ணூற்று மூன்று

பாசி பிடித்த
இதயத்து மாசகலப்,
பூசல் அடிபாறப்
பொய்ம்மை இருளகலத்
தேசு பரப்பித்
தெளிந்தநீ ரோடையைப்போற்
காசி னியிலன்புக்
காந்தி ஒளிகண்டோம்.

உண்மைச் சுடரில்
இறைவன் உறைவதனை
எண்ணத்திற் கண்டோன்
எளிமை உழைப்பிடையில்
அண்ணலவன் காந்தி
அகிலம் உயர்வடையப்
பண்ணியநற் பாதை
தடைப் படுத்தல் நன்றாமோ?

**வே.குமாரசாமி**

குமாரசாமி. வேலுப்பிள்ளை

**பிறப்பு:** கல்வயல், சாவகச்சேரி, இலங்கை, 1-1-1944. அண்மையில் நடைபெற்ற வள்ளுவர் 2000 ஆண்டு நினைவுக் கவிதைப் போட்டியிலே தங்கப் பதக்கம் பெற்றவர்.

## பூ: தொண்ணூற்று நாலு

இந்து முஸ்லிம் இனப்பிளவு பேயெனவே
வந்துற்ற போது வருத்தமுற்று — இந்தியர்கள்
சேர்ந்தொன்றி வாழ்தல் சிறப்பென்ருர் காந்தியென
மாந்தர்க்குள் வாழ்ந்த மகான்.

உண்ணுது தன்னுடலை ஓம்பாது காந்திமகான்
முன்னம் முயன்று வளர்த்தபயிர் — இந்நாளில்
வாடிக் கருகுதையோ வன்நெஞ்சர் செய்கையினுல்
நாடியே காப்பார் எவர்?

**முதல்வனுர்**

ஆதம் லெப்பை, முகம்மது இஸ்மாயில்

**பிறப்பு:** பொத்துவில், இலங்கை, *12-5-1944.*

தமது பதினைந்தாவது வயது தொடக்கமே கவிதை இயற்றி வருகின்ருர்.

# பூ: தொண்ணூற்றைந்து

மனுக்குலம் சீர்மையுற மந்திரம் ஓதிடுவார்!
'சாந்தி' யெனு மந்தச் சத்திய மந்திரம்
மாந்தர்தம் நெஞ்சினில் மாரு தொளிர!
கொடியதோர் வாளின்றிக் கூரியநா வொன்ருல்
அடிமைத் தளையறுத்து அஞ்சாமல் நிற்கார்
அன்பு வழிநின்று ஆயிரம் மாண்டாண்டு
பண்பொளிர வாழ்ந்திடவே பாரெங்குந் தாங்கலந்தே!
சிந்தைகொள்! என்றுரைத்துச் சீர்மேவும் காந்திதம்மை
தந்திட்டான் இப்புவியின் தான்!

மு.பா.

முகம்மது பாரூக். என்

**பிறப்பு:** கோலாலம்பூர், மலேசியா, 18-5-1944.

சிறுகதை-கவிதை-கட்டுரை ஆகிய மூன்று துறைகளிலும் ஈடுபாடுடையவர்.

## பூ: தொண்ணூற்றுறு

வெள்ளையர் ஆட்சி தன்னை
வேரோடு அழிக்க எண்ணி
வள்ளல் நீர் அணிதிரட்டி
வாடிய பாரதத்தின்
சொல்லொணு துயர் களைந்தீர்
சுதந்திர தீபம் தந்தீர்
பல்நெடுங்கால முன்னை
பாரெலாம் போற்றும் ஐயா!

சத்திய வழியில் வாழ்ந்தீர்
சமத்துவ மேன்மை கண்டீர்
பக்தியில் வெற்றி கண்டீர்
பாமரர் மிடிமை போக்கி
புத்துணர்வூட்டி எம்மை
புதுவழி இட்டுச் சென்றீர்
சத்துள இச் செயற்குச்
சரித்திரம் சான்று கூறும்.

**மூதூர் பரீது**

அப்துல் பரீது. மீராசா
**பிறப்பு:** மூதூர், இலங்கை, 30-1-1945.
இலக்கிய ஆர்வமும் ரஸனையும் மிக்கவர்.

# பூ: தொண்ணூற்றேழு

சத்தியத்தைத் தொலைத்துவிட்டு சநாதனத்தின்
சபலத்தில் அழுந் விட்ட சமூகப் போக்கு
மெத்தவுமே செல்லரித்து மேவுசீர்மை
மென்னியிலே பிடித்துவெளி யேற்றும் போது
சத்தியத்தில் வேரூன்றி நின்றுநல்ல
சாதனையால் சலியாத தொண்டால் காந்தி
எத்திசையும் ஒளிவீசி நிற்கக் கண்டோர்
ஏனவரைப் தொடர்வதற்குப் பின்நிற் கின்றார்?

ஜௌபர் மௌலானா

செய்யது ஜௌபர் மௌலானா, யாசீன் மௌலானா
**பிறப்பு:** பொத்துவில், இலங்கை, 15-5-1945.
வளரத்துடிக்கும் இளங் கவிஞர்.

## பூ: தொண்ணூற்றெட்டு

சோர்ந்து சுதந்திர வேட்கை மறந்து
சாதிப் பிரிவினைப் பேதம் வளர்ந்த
மாந்தர் நாற்பது கோடியும் காந்தி
மந்திரத் தால்உணர் வுற்றுள முந்தார்.

அகிம்சை என்னும் ஆயுதங் கொண்டு
அடக்கு முறைகள் யாவையும் வென்று
அகிலம் வியக்க ஆற்றிய தொண்டின்
ஆவியாய்க் காந்தி மகாத்மா திகழ்ந்தார்.

ஏ.ஆர்.எம்.பரீது

*முகம்மது பரீது, அப்துர் ரசீது*
**பிறப்பு:** *கிண்ணியா, இலங்கை, 10-8-1947.*
பேச்சுப் போட்டிகளிலே பரிசு பெற்றவர்.

# பூ: தொண்ணூற்றென்பது

காந்தியினைக் காணவென்று கற்பனைப்பூந் தேரேறி
நீந்திவந்தேன் விண்ணில், நிலவருகே சற்றுநின்றேன்.
''காந்தியெங்கே?'' என்றேன்
''களங்கமிலாப் புன்னகையை
ஈந்துவிட்டுச் சென்றுவிட்டார்
யானறியேன்'' என்றதது.
காரிடத்துச் சென்றேன்
''கருணையெலாம் என்னிடத்துச்
சேரவிட்டுச் சென்றுவிட்டார்
தேடுகிறேன்'' என்றதது.
மின்னுடுவைக் கேட்டேன் ''விகடம் குறும்பெல்லாம்
என்னிடத்தில் விட்டே
இடம்பெயர்ந்தார்'' என்றதது.
செங்கதிரை நாடிநின்றேன் ''செம்மலவர் செய்துவந்த
தங்கடமை யாவுமென்பால் தந்துசென்றார்'' என்றதது.
வானை விளித்தேன் ''வரையில்லாத் தந்நெஞ்சைத்
தானம் எனக்களித்துத்
தாம்மறைந்தார்'' என்றதது.
பாரெல்லாம் காணமல்
பாரதத்தைச் சென்றடைந்தேன்
ஊரெல்லாம் தேடிவிட்டே
ஓய்வுகொள்ளத் தென்னகத்தின்
நாட்டுப் புறத்தைநான் நாலுற்றேன் அங்குவயற்
காட்டில் நிறையநின்றார் காண்!

**சீனி நைனா முகம்மது**

சீனி நைனா முகம்மது. செ.
**பிறப்பு:** கோலாலம்பூர், மலேசியா, 11-9-1947.
வளரத் துடிக்கும் இளங்கவிஞர்.

## பூ: நூறு

சாந்திசமா தானமுயர்
சால்புநெறி யாவையுமே
காந்திஎனுந் தன்னொளியால்
கலந்து மணியாக்கியவர்
நேர்ந்து பெற்ற நெடுந்தவமாய்
நிலைத்தஅடி மைத் தனத்தை
மாந்திய அப் பாரதத்தை
மார்நிமிரச் செய்தவொரு
மாமலையை எங்களது
மஹாத்மா வெனும்நதியை
தேமதுரத் தமிழ்மொழியால்
சிந்தை மகிழ்ந் தோதுகையில்
நாவினிக்கும் சுத்த
நெஞ்சினிக்கும் வையகத்து
பா வினிக்கும் நல்ல பொருள்.

**நயீமா. ஏ.பசீர்**

நூர் நயீமா. அப்துல் பசீர் மரைக்கார்

**பிறப்பு:** அப்புத்தளை, இலங்கை, 7-1-1948.

சிறுகதை – உருவகக்கதை – கவிதை இயற்றுவதில் ஆர்வ முள்ளவர். மேடைப் பேச்சாளராகவும் அறிமுகமாகியுள்ள முஸ்லிம் பெண்மணியாவர். வானொலிக் கலைஞர்.

## பூ: நூற்றொன்று

**ப**த்தி யத்தைத் தான்காத்துப்
    பிறரும் அந்தப் பாதையிலே
சித்தி யடையச் செய்யுமொரு
    சாந்தம் விஞ்சு அகிம்சையுடன்

சத்தி யத்தைச் சாதனையில்
    தாங்கி வெற்றி கண்டவுயர்
சித்தன் காந்தி மஹாத்மாவின்
    செயலின் வழியே செழிப்பீரே!

**கவிவாணன்**

*அப்துல் அஸீஸ். மீரா லெவ்வை*
**பிறப்பு:** *பொத்துவில், இலங்கை, 9-8-1948.*
*வளரத் துடிக்கும் இளங் கவிஞர்,*

## வங்கத்துப் பூ

காந்தி அரசரின் காலடி தொடர்வோம்.
எங்களிடையே பொதுமை ஒன்றுள்ளது:
வறியவரிடத்துப் பறிமுதல் செய்த
பொருளினுல் மடியினை நிறையோம்;
பொருளுளார் மாட்டுக் குனிதலும் இலமே.

ஓங்கிய கரமும் உயர்த்திய தண்டுமாய்
எங்களை அலைப்போர் அவர்கள் வருகையில்,
முறுவலித்து மொழிவோம் நாங்கள்:
சிவந்த நும் பார்வை சிறிய குழந்தைகள்
துயிலினைத் தொலைப்பது கூடும்;
பயம் மறுத்தவரை என் பயம் செய்திடுமே?

எமது பேச்சுகள் எளியன, நேரிய;
அரசியற் திரிப்பினுல் அவை திரிவடையா;
யாத்திரை யாளரை ஆற்றுப் படுத்திச்
சட்டநூல் தடம் புரண் டு லேயச்
சிறையகத் தொல்லேயில் அவை செலுத்திடுமே.

சிறைவழிக் கதவெதிர் இவர்கள் திரளவும்,
அவமதிப்புற்ற கறை யெலாம் அழியும்;
நெடுநாட் பட்ட விலங்குகள் நிலத்திடை
வீழுமே; நெற்றியிற் காந்தி
'வாழிய!' என்ற வண்ணம் விளங்குமே!

ரவீந்திரநாத் தாகூர்

## காந்தி விரும்பிய கீதம்

ரகுபதி ராகவ ராஜாராம்
பதீத பாவன சீதா ராம்
ஈசுவர அல்லா தேரே நாம்
சப்கோ சன்மதி தே பகவான்.



# GANDHI PAAMALAI

இந்தியா-ஈழம்-சிங்கப்பூர்-மலேசியா
ஆகிய
நாலு நாடுகளில்
வாழும்
நூறு கவிஞர்கள்
இயற்றியுள்ள
100
கவிதைகள்

first published in ceylon
under the auspices of
ilampirai
by
m. a. rahman
of arasu publications
on the occasion
of gandhi centenary (1969)
&
printed in ceylon by
rainbow printers
231 wolfendhal street colombo 13